பக்கங்கள்: 12

காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 03 | வள்ளுவர் ஆண்டு 2050 | ஐப்பசி 08 வெள்ளிக்கிழமை 25.10.2019 | கதிர் 354

## இது ரகசியம் அல்ல!

ஐந்துதமிழ்க்கட்சிகளின்கூட்டம் நேற்று சம்பந்தன் ஐயாவின் கொழும்பு இல்லத்தில் நடைபெற இருக்கின்றமை குறித்து நேற்று இப்பத்தியில் குறிப்பிட் டிருந்தேன். தமிழ் மக்கள் கூட்டணியின் செய லாளர் நாயகம் நீதியரசர் விக் னேஸ்வரன்

பக்கம் 02

# 5 தமிழ்க் கட்சிகளின் கூட்டம் 30ஆம் திகதி யாழ்ப்பாணத்தில்

## நேற்றைய கொழும்புச் சந்திப்பில் இரண்டு கட்சிகள் வராதமையால்

ஜனாதிபதித் தேர்தலை ஒட்டி பொது நிலைப்பாட்டு உடன்படிக்கையில் கையெழுத்திட்ட ஐந்து தமிழ் கட்சிகளும் எதிர்வரும் 30 ஆம் திகதி மீண்டும் யாழ்ப்பாணத்தில் சந்தித்துப் பேசுவதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்று மாலை கொழும்பில் இடம்பெற்ற மேற்படி ஐந்து கட்சி தலைவர்களின் சந்திப்பில் மூன்று கட்சிகளின் தலைவர்களே கலந்து கொண்டனர். இரண்டு கட்சிகளின் தலைவர்கள் கலந்து கொள்ளவில்லை. இதனையடுத்தே அக்கூட்டத்தை அனைத்துத் தலைவர்களும் பங்குபற்றக் கூடியதாக எதிர்வரும் 30 ஆம் திகதி வரை ஒத்திவைத்து, அன்றையதினம் யாழ்ப்பாணத்தில் நடத்துவது என நேற்றைய கூட்டத்தில் கலந்து கொண்ட தலைவர்கள் முடிவு செய்தனர் என்று அறியவந்தது.

பக்கம் 03

## புலிகளின் ஆயுதங்களைத் தேடி வட்டக்கச்சியில் அகழ்வுப் பணி

### அதிரடி படை ஏற்பாட்டில் நேற்று ஆரம்பம்



கிளிநொச்சி – வட்டக்கச்சி பகுதியில் புலிகளால் பதுக்கி வைக்கப்பட்ட ஆயுதங்கள் இருப்பதாக தெரிவித்து விசேட அதிரடிப்படையினரால் அகழ்வு பணிகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பக்கம் 03

## சந்திரிகாவின் ஆதரவு சஜித்துக்காம்!



எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் ஜனாதி பதி சந்திரிகா பண்டாரநாயக்க

பக்கம் 03

## தெரிவுக்குழு அறிக்கையை நிராகரிக்கின்றார் மஹிந்த!

கொழும்பு, ஒக். 25

ஈஸ்டர் ஞாயிறு பயங்கர வாதத் தாக்குதல்களை விசா ரிக்கும் நாடாளுமன்றத் தெரி வுக் குழுவின் இறுதி அறிக்கை பக்கச்சார்பானது என எதிர்க் கட்சித் தலைவர் மஹிந்த ராஜ பக்ஷ குற்றம் சாட்டியுள்ளார்.

நேற்று வியாழக்கிழமை

பக்கம் 03

## முடிவை மாற்றி சஜித்தை ஆதரிப்பதற்கு ஐயம்பதியின் கட்சி நேற்றுத் தீர்மானம்!



கொழும்பு,ஒக்.25

சஜித் பிரமேதாஸவுக்கு ஆதரவு வழங்கும் ஐக்கிய இடதுசாரி முன்னணியின் மறுதீர்மானம் அக் கட்சியின் மத்திய செயற்குழுவில் நேற்று நிறைவேற்றப்பட்டுள்ளது என்று கட்சியின் தேசிய அமைப்பாளர் ஜயம்பதி விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.

பக்கம் 03

## சென்னை விமான சேவையை தீபாவளி தினத்தில் ஆரம்பிக்கும் முயற்சி இறுதி நேரத்தில் சறுக்கியது

யாழ்ப்பாணம்,ஒக்.25

யாழ்ப்பாணம்விமான நிலையத்துக் கும் சென்னைக்கும் இடையிலான விமான சேவையை நடத்து முயற்சி இந்திய தூதரக மட்ட நகர்வையடுத்து வெற்றி பெற்றதாக

பக்கம் 03

## 80 கிலோ கஞ்சா நேற்று மாலை தெல்லிப்பழையில் சிக்கியது!

### ஒருவர் கைது; மற்றொருவர் தப்பியோட்டம்



யாழ்ப்பாணம், ஒக். 25

தெல்லிப்பழைப் பகுதியில் வைத்து 80 கிலோ கஞ்சா காங்கேசன்துறைப் பொலிஸாரால் நேற்று மாலை மீட்கப்பட்டது.

பக்கம் 03

## வலி. வடக்குப் பிரதேச சபையின் கூட்டத்தில் களேபரம்,குழப்பம்!

### பொலிசை அழைத்து தொடரும் நிலை

வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் மாதாந்த அமர்வில் நேற்றுப் பெரும் களேபரம் மற்றும் குழப்பம் ஏற்பட்டது. இரு தரப்பு மோதல்களும் இடம்பெற்றன. நிலைமையைச்சமாளிக்கப்பொலிஸாரை அழைக்க வேண்டிய சூழலும் நேர்ந்தது.

சபையின் 18 உறுப்பினர்கள் இணைந்து வேண்டு

பக்கம் 03

## கோட்டாபய, சஜித்துக்கு வாக்களிக்கமாட்டோம்!

### காணாமற்போனோரின் உறவுகள் வவுனியாவில் நேற்று போரட்டம்



வவுனியா, ஒக். 25

ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் சஜித் பிரேமதாஸவுக்கு வாக்களிப்பதைப் புறக்கணிப்போம்

பக்கம் 03

## பிரி. அனைத்துக்கட்சி நாடாளுமன்ற குழுவுடன் தமிழின அழிப்புத் தொடர்பில் கலந்துரையாடல்

### நேற்று வெஸ்ட்மினிஸ்டர் நாடாளுமன்றக் கட்டடத்தில் நடந்தது

லண்டன்,ஒக்.25

இலங்கையில் தமிழ் இன அழிப்பு நடைபெற்றுள்ளதை உறுதி செய்ய வேண்டும் மற்றும் மீண்டும் ஓர் இன அழிப்பு நடைபெறாமல் தடுக்க வேண்டும் என்னும் கோரிக்கைகளை வலியுறுத்திபிரித்தானியதமிழருக்கான அனைத்துக் கட்சி நாடாளுமன்றக் குழு நேற்று வியாழக்கிழமை காலை 10 மணி முதல் மதியம் 1 மணிவரை பிரித்தானிய வெஸ்ட்மின்ஸ்டர் நாடாளுமன்றக் கட்டடத்தில் மாநாடு ஒன்றை நடத்தியது.

உலகின் பல்வேறு பகுதிகளில் நடைபெற்ற இன அழிப்பு பற்றிய

பக்கம் 03



# நீராவியடி ஆலயத்துக்குள்ளே தொல்பொருள் சிதைவுகளாம்

## நாயாறு இராணுவ முகாமில் தொல்பொருள் கூடம் கொழும்பிலிருந்து வந்த பிக்குகளுக்குத் தெரிவிப்பு





முல்லைத்தீவு, ஒக். 25

முல்லைத்தீவு பழைய செம்மலை நீராவியடி பிள்ளையார் ஆலய வளாகத்துக்குள் தொல்பொருள் சிதைவுகள் இருப்பதாக நேற்று அந்தப் பகுதிக்கு வருகை தந்த பௌத்த பிக்குகளிடம் அங்கு ஆக்கிரமித்து விகாரை அமைத்துள்ள தரப்பு காண்பித்தமையால் புதிய சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

முல்லைத்தீவு – பழைய செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தை ஆக்கிரமித்து, பௌத்த விகாரையை அமைத்த மேதாலங்கார கீர்த்தி தேரர் புற்றுநோயால் கடந்த செப்ரெம்பர் 21ஆம் திகதி மஹரகம மருத்துவமனையில் உயிரிழந்தார்.

அவரது உடலை நீதிமன்றக் கட்டளையையும் மீறி ஆலயக் கேணிக்கு அருகில் தகனம் செய்தமையால் அந்தப் பகுதியில் பெரும் பிரச்சினைகள் உருவாகின.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த பௌத்த பிக்குகள் 30 பேர்வரை பஸ் ஒன்றில் நீராவியடி பிள்ளையார் ஆலய வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த விகாரையைப் பார்வையிடுவதற்காக வருகை தந்திருந்தனர்.

பௌத்த பிக்குகள் உள்ளிட்டவர்களிடம் நீராவியடிப் பிள்ளையார்ஆலயவளாகம்தொல்பொருள் திணைக்களத்துக்குச் சொந்தமானது எனவும் இந்த இடத்தில் தொல்பொருள் ஆதாரங்கள் இருக்கின்றனஎனதெரிவிக்கப்பட்டது.

அத்துடன், தொல்பொருள் ஆதாரங்கள் தொடர்பாகவும் அவர்கள் பார்வையிட்டார்கள்.

நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்துக்குஎதிர்ப்பக்கமாகஅமைந்திருக்கும் நாயாறு இராணுவ முகாமில்தொல்பொருள்சின்னங்கள் சில ஒரு கண்காட்சிக் கூடமாக அமைக்கப்பட்டிருக்கின்றன.

இந்ததொல்பொருள்சிதைவுகள் வைக்கப்பட்டிருக்கும் பகுதியின் ஒரு பிரிவு இராணுவத்தினரின் தங்குமிடமாகவும்காணப்படுகின்றது. அதேபோன்று நீராவியடிப் பிள்ளையார் ஆலயவளாகத்தைச் சுற்றிக் காணப்படுகின்ற பிரதேசத்திற்குள் தொல்பொருள் திணைக்களம் அதன் அடையாளக் கற்களை நாட்டி உள்ளது. (ஐ)

# யாழ்ப்பாண பல்கலைக்கழக பட்டமளிப்பு டிசெ. 6 ஆரம்பம்

## இரண்டு நாள்களில் பத்து அமர்வுகள் 1700 பட்டதாரிகளுக்குப் பட்டங்கள்

யாழ்ப்பாணம், ஒக். 25

யாழ்ப்பாண பல்கலைக்கழக 34 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் இரண்டாவது பகுதியை எதிர்வரும் டிசெம்பர் 6 ஆம், 7 ஆம் திகதிகளில் நடத்துவதற்குத் தீர்மனிக்கப்பட்டிருக்கிறது.

எதிர்வரும் டிசெம்பர் 6 ஆம், 7 ஆம் திகதிகள் 10 அமர்வுகளாக நடத்தப்படவுள்ள பொதுப்பட்டமளிப்பு விழாவில் சுமார் 1300 உள்வாரி பட்டதாரிகளுக்கான பட்டங்கள் வழங்கப்படவிருக்கின்றமையுடன், சுமார் 400 வரையான வெளிவாரிப் பட்டதாரிகளின் பட்டங்கள் உறுதிப்படுத்தப்படவுள்ளன.

பேராசிரியர் என். சண்முகலிங்கன் துணைவேந்தராக இருந்த காலப்பகுதி வரை நடைமுறையிலிருந்து பின்னர் கைவிடப்பட்டிருந்த கௌரவ கலாநிதிப் பட்டங்கள் வழங்கும் நடைமுறையை மீளவும் ஆரம்பிப்பது தொடர்பில் கலைப் பீட வட்டாரங்கள்முன்மொழிவுகளைச் சமர்ப்பித்திருக்கின்றன. அந்த அடிப்படையில் இம்முறை யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின்கௌரவகலாநிதிபட்டங்களைப் பெறப்போகும் பிரபலங்கள் யார் என்பது அடுத்த வாரமளவில் தெரிய வருமென எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த வருடம் 34 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் முதலாவது பகுதி நடந்த போதிலும், பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் இ. விக்னேஸ்வரன் பதவி விலக்கப்பட்டமை, பல்கலைக் கழகத்துக்கு வேந்தர் நியமிக்கப்படாமை போன்ற காரணங்களினால் 34 ஆவது பொதுப் பட்டமளிப்புவிழாவின்இரண்டாவது பகுதியை நடத்துவதில் தாமதங்கள் காணப்பட்டன.

பட்டமளிப்பு விழா நடத்தப்படாத காரணத்தினால், கடந்த வருடம் முதல் பெருமளவான பட்டதாரிகள் அரச வேலை வாய்ப்புக்களைப் பெற முடியாத நிலை தோன்றியதையடுத்து கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் யாழ்ப்பாண பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் கவனயீர்ப்புப் போராட்டமொன்றினை ஏற்பாடு செய்ததுடன், பல்கலைக்கழகத்தின் தகுதி வாய்ந்த அதிகாரி பேராசிரியர் க. கந்தசாமியின் கவனத்துக்கும் கொண்டு வந்தனர்.

மாணவர்களின் வேண்டுகோளையடுத்து நிலைமையைப் பல உயர்மட்டங்களுக்கும் தகுதி வாய்ந்த அதிகாரி தெரியப்படுத்தியதையடுத்து, பல்கலைக்கழகத்தின்முன்னாள்வேந்தர்பேராசிரியர் எஸ். பத்மநாதன் ஜனாதிபதியினால் வேந்தராக நியமிக்கப்பட்டார்.

வேந்தர்நியமனத்தையடுத்து பொதுப் பட்டமளிப்பு விழாவை எதிர்வரும் டிசெம்பர் 6, 7 ஆம் திகதிகளில்நடத்துவதென நேற்று இடம்பெற்ற பட்டமளிப்பு விழாக் குழுவின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. தகுதி வாய்ந்த அதிகாரிபேராசிரியர் க. கந்தசாமி, பீடாதிபதிகள், நிர்வாக அதிகாரிகள், உப விடுதிக் காப்பாளர்கள் உட்படபலர்நேற்றையபட்டமளிப்பு விழா குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர்.

பல்கலைக்கழக சட்ட ஏற்பாடுகளுக்கமைவாக யாழ்ப்பாண பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் எஸ். பத்மநாதன் தலைமையில் தகுதி வாய்ந்த அதிகாரி பேராசிரியர் க. கந்தசாமியின் வழிகாட்டலில் வெகு விமரிசையாக பட்டமளிப்பு விழாவினை நடாத்துவதென நேற்றைய கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. (ஐ-07)

### தேங்காய்க்கு கட்டுப்பாட்டு விலையை நீக்கியது அரசு

கொழும்பு, ஒக். 25

தேங்காய்க்கு அரசால் விதிக்கப்பட்டிருந்தகட்டுப்பாட்டு விலை நீக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

தேங்காய்க்கு ஏற்கனவே 75 ரூபா கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இந்த அறிவிப்பையே வர்த்தமானி அறிவிப்பின் மூலம் நுகர்வோர் அதிகார சபை திரும்பப் பெற்றுள்ளது.

சந்தையில் மீண்டும் தேங்காயின் விலையை அதிகரிக்க வியாபாரிகள் நடவடிக்கை எடுப்பார்களாயின், கட்டுப்பாட்டு விலை மீண்டும் அமுலுக்கு வரும் எனவும் அதிகார சபை குறிப்பிட்டுள்ளது. (ஐ)

# மக்களைச் சந்திக்கின்றது பேரவையின் சுயாதீனக் குழு

யாழ்ப்பாணம்,ஒக்.25

தமிழ் மக்கள் பேரவையால் தொடங்கப்பட்ட சுயாதீனக் குழு கிழக்கிலும் வடக்கிலும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளை சந்திக்கவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் பொது அமைப்புக்களின் கருத்தறிவதே இச்சந்திப்புக்களின் நோக்கமாகும். இச்சந்திப்புக்கள் இன்று வெள்ளிக்கிழமை மாலை 05.00 மணிக்கு திருகோணமலை உப்புவெளியில் உள்ள மேய்ப்பு பணி நிலையத்திலும் (Pastoral Centre), நாளை சனிக்கிழமை மாலை 04.00 மணிக்கு யாழ்ப்பாணத்தில் இல 61, பலாலி வீதி, கந்தர்மடம் சந்தியில் உள்ள பேரவை அலுவலகத்திலும் இடம்பெறும்என அறிவிக்கப்பட்டுள்ளது.

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் நின்றிருந்தாலும் இக்கூட்டத்தில்கலந்துகொள்ளும் மனநிலையில் இல்லை என்பதை நேற்று இப்பத்தியில் சூசகமாகச் சுட்டிக்காட்டியிருந்தேன்.

அதுதான் இன்று நடந்திருக்கின்றது.

கொழும்பில் தங்கியிருந்த நீதியரசர் விக்னேஸ்வரன் தமிழ் வானொலி ஒன்றின் செய்தியை செவிமடுத்துக்கொண்டிருந்தார்.

அதில் ஜே.வி.பியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸநாயக்கவின் கருத்து ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தது.

ஐந்து தமிழ்க் கட்சிகள் ஒன்று கூடி பொது இணக்கப்பாட்டுக்கு வந்திருக்கின்றன என்றும் –

13 அம்சத் தீர்மானங்களை அவை எடுத்துள்ளன என்றும் –

செய்திகள் வருகின்றன என்றார் அநுரகுமார திஸநாயக்கா. பத்திரிகைகளில் வாசிக்கிறோமே தவிர அந்தத் தீர்மானங்கள் குறித்து சம்பந்தப்பட்ட கட்சிகள் இதுவரை எமக்கு உத்தியோக பூர்வமாகத் தெரியப்படுத்தவே இல்லை. அதனால் நாம் உரிய பிரதிபலிப்பு எதனையும் காட்ட முடியாது என்றும் அநுரகுமார கூறினார் என அந்தச் செய்தி தெரிவித்தது.

ஏற்கனவே ஐந்து தமிழ்க் கட்சிகளும் ஒன்று கூடி தமிழில் வரைந்த – 13 அம்சங்கள் அடங்கிய – பொது உடன்பாட்டு வாசகத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பை அவர் பெற்றிருந்தார்.

அவற்றைப் பிரதியாக்கம் செய்து, இவைதான் தமது கட்சி உட்பட ஐந்து தமிழ்க் கட்சிகளும் சேர்ந்துஉடன்பாடுகண்டவிடயங்கள், அவற்றை உங்கள் கவனத்துக்கு அனுப்புகிறோம் என்ற மேலதிக இணைப்புக்கடிதத்துடன் முக்கிய வேட்பாளர்களான சஜித் பிரேமதாஸ, கோட்டாபய ராஜபக்ஷ, அநுரகுமார திஸநாயக்கா ஆகிய மூவருக்கும் அனுப்பி வைத்தார் விக்னேஸ்வரன்.

இனி பந்து அவர்களின் களத்தில் என்ற பெருமூச்சு நிலைப்பாட்டில் நீதியரசர் விக்னேஸ்வரன்.

♦ ♦ ♦

நேற்றுக் கொழும்பில் தமிழ்க் கட்சிகள் கூட்டிய கூட்டத்திற்கு விக்னேஸ்வரனின் தரப்பும், சுரேஷ் பிறேமச்சந்திரனின் தரப்பும் சமுகம் தந்திருந்தால், தற்போதைய அரசியல் நிலைவரம் குறித்து சம்பந்தனின் முன்னிலையில் – அவரின் பங்களிப்புடன் – ஒரு திறந்த கலந்துரையாடலை முன்னெடுத்திருக்கலாம். தவறிவிட்டது.

அடுத்து 30 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடக்கக் கூடிய ஐந்து கட்சிக் கூட்டத்திற்கு சம்பந்தன் ஐயா சமுகம் தரமாட்டார். அவரின்றியே விடயங்களை ஐந்து கட்சிகளும் விவாதிக் வேண்டியிருக்கும்.

எனினும், ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்புக்கு முன்னர் ஒரு தடவை சம்பந்தன் ஐயா யாழ்ப்பாணத்துக்கு வரவிருக்கின்றார் என்று தெரிகின்றது.

அது எதிர்வரும் நவம்பர் 10 ஆம் திகதி நடைபெறும். அமரர் ரவிராஜ் எம்.பியின் 13 ஆவது நினைவு தினக் கூட்டத்திற்கு ஆகும்.

சாவகச்சேரியில் உள்ள தென்மராட்சி கலாசார மண்டபத்தில் நடைபெறும் இந்த நிகழ்வில் உலகத் தமிழர் பேரவையின் தலைவர் அருட்தந்தை எஸ்.ஜே. இமானுவல் "போரின் முடிவும் போராட்டத் தொடர்ச்சியும்" – என்ற தலைப்பில் நினைவுப் பேருரை நிகழ்த்துவார்.

அக் கூட்டத்தில் சம்பந்தன் ஐயாவும் ஒரு சிற்றுரை ஆற்றுவார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இப்போது பொது இணக்கப்பாட்டுக்கு வந்துள்ள ஐந்து தமிழ்க் கட்சிகளின் தலைவாகளும் ஒருங்கு சேரும் முதலாவது பொது அமர்வாக இந்த நினைவுப் பேருரை நிகழ்வு இடம்பெறும் என எதிர்பார்க்கலாம்.

தென்மாரட்சியின் மைந்தன், முன்னாள் வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் சட்டத் தரணி கேசவன் சயந்தனின் ஒழுங்கமைப்பில் இந்தக் கூட்டம் இடம்பெறுகின்றது.

ஜனாதிபதி தேர்தலுக்கு சுமார் 06 நாள்களுக்கு முன்னர் – கடைசி நேரத்தில் நடக்கும் – மிக முக்கிய அரசியல் தொடர்புள்ள நிகழ்வாக இது கருதப்படுவதாலும், அங்கு கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் உரையாற்ற இருக்கின்றமையாலும், அற்கு அதீத முக்கியத்துவம் கிட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தத் தேர்தலில் தமிழர்கள் ஒற்றுமைப்பட்டு எடுக்கும் முடிவு, தென்னிலங்கையில் தவறான தரப்புகளை ஒற்றுமைப்பட வைத்துப் பிழையான வழிக்கு நெறிப்படுத்தி விடும் என்பதால் நாம் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும் என கூறி வருபவர் சம்பந்தன்.

இந்தத் தேர்தலில் தமிழரின் செல்நெறி, அணுகுமுறை எப்படி இருக்கவேண்டும்என்பது குறித்து இப்போதைய நிலையில் மௌனம்காட்டி வரும் சம்பந்தன், தேர்தலுக்கு முன்னர் கடைசி நேரத்தில் நடக்கும் இந்தக் கூட்டத்தில் தமிழ் வாக்காளர்களை வழிப்படுத்தும் செய்தியை – தகவலை – சூசகமாகத் தொட்டுக் காட்டுவார் என்று கருதப்படுவதாலும் இந்தக் கூட்டம் முக்கியம் பெறுகின்றது.

தேர்தல் சூட்டுக்கு முந்திய ஜுரத்தை இந்த நினைவுப் பேருரை நிகழ்வு கிளப்பி விடுமோ என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்...!

-மின்னல் -

## சந்திரிகாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குமாரதுங்கவின் ஆதரவு சஜித் பிரேமதாஸவுக்கு கிடைக்கவுள்ளதாக அமைச்சர் பி.ஹரிசன் தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் இன்னும் சில முக்கிய உறுப்பினர்களுடன் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு வழங்கவுள்ளார் என அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 5 தமிழ்க் கட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் இல்லத்தில் நேற்று நடைபெற்ற சந்திப்பில் புளொட் தலைவர் த.சித்தார்த்தன், இலங்கைத் தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, அதன் செயலாளர் நாயகம் துரைராஜசிங்கம், எம்.ஏ.சுமந்திரன், ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், அக்கட்சியின் பிரமுகர் ஜனா மற்றும் தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் கொழும்பில் நின்ற போதும் நேற்றைய கூட்டத்துக்குச் சமூகம் தரவில்லை. அதேபோல ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சி சார்பிலும் எவரும் இக்கூட்டத்தில் பங்குபற்றவில்லை. ஆக, தமிழ்க் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் மூன்று கட்சிகளின் பிரதிநிதிகளே நேற்றைய கூட்டத்திற்கு சமூகம் தந்தனர்.

அதனாலும், பிரதான கட்சிகளின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியான பின்னர் அவற்றின் அடிப்படையில் விடயங்களை ஆராய்வது உசிதம் என நேற்று சந்திப்புக்கு வந்த பிரதிநிதிகள் தெரிவித்தமையாலும், அடுத்த சந்திப்பை எதிர்வரும் 30 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடத்த முடிவு செய்யப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.

பொதுஜன பெரமுனவின் தேர்தல் விஞ்ஞாபனம் இன்றும், ஐக்கிய தேசிய முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனம் 30 ஆம் திகதியும் வெளியாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில் தபால் மூல வாக்களிப்பு எதிர்வரும் 31ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கின்றமை கவனிக்கத்தக்கது.

2015 ஜனவரி ஜனாதிபதித் தேர்தலின் போதும் தமிழ் மக்களை வழிப்படுத்தும் தமிழ்க் கூட்டமைப்பின் தீர்மானம் தபால் மூல வாக்களிப்பு முடிவடைந்த பின்னரே வந்தது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## தெரிவுக்குழு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மல்வத்து, அஸ்கிரிய மகா நாயக்கர்களை சந்தித்து ஆசி பெற்ற பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்தபோது அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

மேலும் ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பான இறுதி அறிக்கையைத் தயாரித்த குழுவில் குற்றம் சுமத்தப்பட்ட சிலர் உள்ளனர் எனவும், குற்றம் சுமத்தப்பட்டுள்ளவர்கள் இணைந்து அறிக்கை ஒன்றைத் தயாரிக்கும்போது, அது பக்கச்சார்பானதாகவே இருக்கும் இருக்கும் என்றும் அவர் கூறினார். (ஐ)

## சென்னை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறப்படுகின்றது.

எனினும் முதலாவது சென்னை – யாழ்ப்பாண விமான பறப்பு சேவையை நல்ல நாளான தீபாவளியன்று – 27 ஆம் திகதி – ஆரம்பிப்பதற்கு இந்தியத் தரப்பில் எடுக்கப்பட்ட முயற்சி கடைசி நேரத்தில் வெற்றியளிக்கவில்லை என்றும் தெரியவருகின்றது.

பலாலியில் இருந்து சர்வதேச விமான சேவையை நடத்துவது தொடர்பில் சில ஒழுங்குமுறைகளை இலங்கைத் தரப்பு இன்னும் முடிக்காமையினாலேயே தீபாவளியன்று இச்சேவையை ஆரம்பிக்கும் எத்தனம் சரிவரவில்லை என்றும் கூறப்பட்டது.

யாழ்ப்பாணம் சர்வதேச விமானநிலையம் கடந்த 17 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்ட நிலையில் நவம்பர் முற்பகுதியில் சேவைகள் ஆரம்பமாகும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதனிடையே, இந்தப் போக்குவரத்து சேவைக்கான கட்டணம் தொடர்பில் இந்திய விமான நிறுவனங்களுக்கும் இலங்கைத் தரப்பினருக்குமிடையே பேச்சு தொடர்ந்து இடம்பெறுகின்றது.

இந்திய விமான நிறுவனங்கள், சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சு மற்றும் நிதி அமைச்சு ஆகியன இது தொடர்பான கலந்துரையாடல்களை நடத்தி வருகின்றன. விமான சேவை நிறுவனங்கள் பயணச் சேவைக் கட்டணத்தை குறைப்பதற்கு விமான நிலைய வரியைக் குறைக்குமாறு கோரியுள்ளன.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் பயணி ஒருவரின் விமான சேவைக்கட்டணத்துடன் 60 டொலர் விமான நிலைய வரியாக அறிவிடப்படுகின்றது.

இதேயளவு விமான நிலைய வரியை யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையத்திலிருந்து பயணிக்கும் பயணியிடம் அறவிட்டால் விமான சேவைக் கட்டணத்தைக் குறைந்த விலையில் வழங்க முடியாதெனக் கூறப்படுகின்றது.

இதேவேளை திருச்சியில் இருந்து யாழ்ப்பாணம் விமான நிலையத்துக்கு சேவையை ஆரம்பிக்கத் திட்டமிடப்படுகிறது.

கடந்த வாரம் வியாழக்கிழமை சென்னையில் இருந்து முதல் விமானம் யாழ்ப்பாணத்துக்குப் பயணத்தை மேற்கொண்டது. இதன் போது திருச்சியில் உள்ள கட்டுப்பாட்டு அறையே அந்த விமானத்தைக் கண்காணித்தது.

திருச்சி விமான கட்டுப்பாட்டு அறை யாழ்ப்பாணத்துக்கு மிக நெருக்கமாக இருக்கிறது.

சென்னையில் இருந்து யாழ்ப்பாணத்துக்கான விமான சேவை ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில், அடுத்த கட்டமாக, யாழ்ப்பாணத்துக்கும் திருச்சிக்கும் இடையிலான விமான சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்கான பேச்சுக்கள் இடம்பெற்று வருகின்றன.

## 80 கிலோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காங்கேசந்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சேனாதீரவின் வழிகாட்டலில் உருவாக்கப்பட்ட குழுவாலேயே இந்தக் கஞ்சா கடத்தல் முறியடிக்கப்பட்டுள்ளது.

காரொன்றில் வைத்துக் கடத்தப்பட்ட கஞ்சாவே அவ்வாறு மீட்கப்பட்டது. கிளிநொச்சியைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இன்னொருவர் தப்பித்துத் தலைமறைவாகியுள்ளார். (ஐ-07)

## பிரி.அனைத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆய்வுகளை மேற்கொண்ட அறிஞர்கள், ஆய்வாளர்கள் இதில் பங்குபற்றினர். அவர்களுடன் ஐக்கிய நாடுகள் சபையின் இனப்படுகொலை பிரிவின் ஆய்வாளர்கள் மற்றும் பிரித்தானியாவின் சட்ட வல்லுனர்களும் இதில் கலந்து கொண்டனர். இம்மாநாட்டில் பிரித்தானிய ராணியின் அதிகாரிகள், ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் முதலானோரும் பங்கேற்றனர்.

இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான இன அழிப்பு நடைபெற்றுள்ளதை சர்வதேச சமூகம் நிரூபிக்க வேண்டிய அவசியம் மற்றும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இன அழிப்பு திட்டங்கள் பற்றிய முழுமையான விழிப்புணர்வை இம்மாநாட்டின் வாயிலாக, பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும் இராஜதந்திர சமூகத்திடமும் கொண்டு போய்ச் சேர்க்க முடிந்ததாகத் திருப்தி தெரிவிக்கப்பட்டது.

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து வட்டக்கச்சி விவசாய பண்ணைக்கு அண்மையில் உள்ள காணி ஒன்றிலேயே இந்த அகழ்வு பணிகள் நேற்றுப் பகல் தொடங்கியது.

இந்தக் காணியில. முன்னர் புலிகளின் முகாம் ஒன்று அமைந்திருந்தது. அந்த முகாமில் புலிகளால் பதுக்கி வைக்கப்பட்டிருந்த வெடிபொருள்கள் அடங்கிய கொள்கலன் இருப்பதாக விசேட அதிரடிப்படையினருக்குத் தகவல் கிடைத்துள்ளதாம்.

இந்நிலையில் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றின் அனுமதியுடன் அந்தப் பகுதியில் அகழ்வு பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. அந்தப் பகுதியை கிளிநொச்சி நீதிவான் பார்வையிட்டு அனுமதி வழங்கியதன் பின்னர் அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

## கோட்டாபய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனத் தெரிவித்து வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளினால் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டம், வவுனியா நீதிமன்ற வளாகத்துக்கு முன்பாக நேற்று வியாழக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

978ஆவது நாளாக காணாமற்போனவர்களின் உறவினர்களால் வவுனியாவில் சுழற்சி முறைப் போராட்டம் இடம்பெறும் கொட்டகைக்கு முன்பாக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அமெரிக்க மற்றும் ஐரோப்பியக் கொடிகளைத் தாங்கியிருந்தனர்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதான இரு வேட்பாளர்களான சஜித் பிரேமதாஸ மற்றும் கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோரது படங்களைத் தாங்கியவாறு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

அத்துடன், இரண்டு பிரதான வேட்பாளர்கள் மீதும் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களான போர்க்குற்றச்சாட்டு மற்றும் சிங்கள பௌத்த, ஒற்றையாட்சிக் கொள்கை போன்ற குற்றச்சாட்டுக்கள் போராட்டக்காரர்களால் முன்வைக்கப்பட்டன. அத்துடன் இந்தக் காரணங்களின் அடிப்படையில் இவ்விரு வேட்பாளர்களும் புறக்கணிக்கப்படவேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டது. (ஐ)

# தேர்தல் குற்றச்சாட்டுக்கள் ஆயிரத்து 485 ஆக உயர்வு!

கொழும்பு, ஒக். 25

எதிர்வரும் நவம்பர் 16 ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் தேர்தலுடன் தொடர்புடைய 1485 முறைப்பாடுகள் இதுவரை பதிவாகியுள்ளன எனத் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த 08 ஆம் திகதி தொடக்கம் நேற்று முன் தினம் புதன்கிழமை இந்த முறைப்பாடு கள் கிடைத்துள்ளன.

தேர்தல் விதி மீறல்கள் தொடர்பாக 1414 முறைப்பாடுகளும், வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 10 முறைப்பாடுகளும் மற்றும் 61 வேறு முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 04.30 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணித்தியாலங்களில் 126 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.



# வெள்ளத்தில் கொழும்பு!

கொழும்பு, ஒக். 25

கொழும்பில் நேற்றுக் கொட்டித் தீர்த்த கடும் மழை காரணமாக பல வீதிகள் நீரில் மூழ்கின.

தும்முல்லசந்திப் பூபேஸ்லைன் வீதி, கிராண்ட்பாஸ், ஹோர்டன் பிளேஸ், கின்சி வீதி மற்றும் ஆமர் வீதி ஆகிய சில பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன. (ஐ)

## வலி.வடக்கு..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மென்றே திட்டமிட்டு குழப்பம் விளைவித்தனர் எனக் குற்றஞ்சாட்டியிருக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த தவிசாளர் எஸ்.சுகிர்தன், தன் மீதும் பொலிஸார் மீதும் வேண்டுமென்றே திட்டமிட்டு குற்றச்சாட்டுக்களைச் சுமத்துகின்றனர் என விசனம் தெரிவித்திருக்கின்றார்.

இந்தக் குழப்ப முயற்சி 3 நாள்களுக்கு முன்பே திட்ட மிடப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேற்படி குழப்பம் தொடர்பாக நேற்று மாலை ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும்போதே தவிசாளர் மேற்கண்டவாறு கூறியிருக்கின்றார். இதன்போது அவர் மேலும் கூறியவை வருமாறு:–

சென்ற கூட்டங்களில் நிறைவேற்றப்பட்ட இரு தீர்மானங்கள் குறித்து மேற்படி குழப்பம் விளைவித்த உறுப்பினர்கள் கேள்வி எழுப்பியிருந்தனர்.

முதலாவது தீர்மானம் தையிட்டி ஆவளை மயானத்தில் அமைக்கப்பட்டிருக்கும் கோபுரம் அகற்றுவது தொடர்பானது. அது சம்பந்தமாக நாங்கள் குறித்த நிறுவனத்திற்குக் கடிதம் எழுதியதன் அடிப்படையில் அதனை அகற்றுவதற்கு அவர்கள் இணங்கியிருக்கின்றனர்.

அடுத்தது – சுகாதார நிலநிரவுகை திட்டம் தொடர்பானது. அது முன்னரே திட்டமிட்ட விடயம். அது தொடர்பாகவும் நாங்கள் மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு கடிதம் எழுதியதன் அடிப்படையில் தேர்தல் காலம் என்பதால் தேர்தலின் பின்னர் மக்களுக்கு விழிப்புணர்வு கொடுப்பதாக கூறியிருக்கின்றனர்.

இதனை நாங்கள் சபைக்கு கூறிய நிலையில் ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் 8 பேர், சுதந்திர கட்சி உறுப்பினர்கள் 4 பேர், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர்கள் 5 பேர், தமிழ்தேசிய கூட்டமைப்பு உறுப்பினர் எஸ்.சஜீபன் ஆகியோர் இணைந்து குழப்பங்களை ஏற்படுத்தினர்.

இதனால் எமக்குள்ள அதிகாரத்தின் அடிப்படையில் குழப்பம் விளைவித்தவர்கள் வெளியேற்றப்பட்டனர். அதன் பின்னரும் குழப்பம் விளைவித்த நிலையில் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியிருந்தோம். பின்னர் எஞ்சிய 20 உறுப்பினர்களுடன் கூட்டம் அமைதியாக நடைபெற்று முடிந்தது.

வெளியே நின்ற பொலிஸாருடன் பேசியபோது ஈ.பி.டி.பி உறுப்பினர் ஒருவர் என்னை பொலிஸாருடன் இணைத்து வீடியோ எடுத்துக் கொண்டிருந்த நிலையில் நான் அவரது தொலைபேசியைத் தட்டினேன். கீழே விழுந்த தொலைபேசியை பொலிஸார் எடுத்தனர்.

இவ்வாறிருக்க நான் தாக்கினேன் எனவும் தனக்குக் காயங்கள் உள்ளன எனவும் பொய்யான கருத்துக்கள் சிலரால் கூறப்படுகின்றன. இதேபோல் சபைக்கு வெளியே நின்றிருந்த பொலிஸார் துப்பாக்கியைப் பாதுகாப்பதற்காக அதனை அவர்களது கையில் எடுத்து வைத்திருந்தமையை, அதைக் காட்டி அவர்கள் அச்சுறுத்தினர் எனக் கூறி பொலிஸார் மீதும் அபகீர்த்தியை ஏற்படுத்தியுள்ளனர். – என்றார்.

## முடிவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னதாக இக்கட்சி ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார திஸாநாயக்கவுக்கு ஆதரவு வழங்குவதாக அறிவித்திருந்தது. இந்நிலையில் தனது ஆதரவை நேற்று மறுதீர்மானம் மூலம் மாற்றி சஜித் பிரேமதாசவுக்கு வழங்குவ அக்கட்சி முடிவு செய்தது.

இது தொடர்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில்–

கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் அவரின் பின்னால் இருக்கும் அடிப்படைவாத குழுக்களினால் இலங்கையின் ஜனநாயகம் ஆபத்துக்கு உள்ளாகலாம் என்ற அடிப்படையில் கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் பொது மக்கள் ஆகியோர் சஜித் பிரேமதாஸவை ஆதரிக்க வேண்டுமென அழைப்பு விடுத்திருந்த நிலையில் கோட்டாபய ராஜபக்ஷவை தோற்கடிக்க கூடிய திறமைமிக்க வேட்பாளர் சஜித் பிரேமதாஸ என்பதால் அவரை ஆதரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## பொறுப்பாளிகள் யார்? யார்?

நாட்டில் கடந்த ஏப்ரல் 21ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு இஸ்லாமியத் தீவிரவாதிகள் நடத்திய தொடர்குண்டுத் தாக்குதல்கள் தொடர்பாக விசாரணை நடத்திய நாடாளுமன்றத் தெரிவுக் குழு தனது அறிக்கையை வெளியிட்டு விட்டது. சாக்குப் பைக்குள் இருந்த பூனை வெளியே வந்து விட்டது எனலாம்.

இந்த விடயம் தொடர்பாகக் கொலைக் குற்றம் உட்படப் பல்வேறு மோசமானகுற்றச்சாட்டுகள் அப்போதைய பாதுகாப்புச் செயலாளர் மீதும் பொலிஸ் மா அதிபர் மீதும் சுமத்தப்பட்டன.

நீதிவான் நீதிமன்றத்தினால் இருவரும் பிணையில் விடுவிக்கப்பட்டிருக்கையில், அதற்கு எதிராக மேன்முறையீடு செய்த சட்டமா அதிபர், அதன் மூலம் மேற்படி இருவரையும் திரும்பவும் விளக்கமறியலில் வைக்கும் தமது முயற்சியில் வெற்றியீட்டியிருக்கின்றார்.

இந்தப் பின்புலத்தில்தான் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் விசாரணை அறிக்கை பகிரங்கமாகி, இவ்விடயத்தில் முக்கிய பல அம்சங்களை அம்பலப்படுத்தி நிற்கின்றது.

அப்போதைய பாதுகாப்புச் செயலாளர் மற்றும் பொலிஸ் மா அதிபர் மீது இவ்விவகாரத்தை ஒட்டிக் கிரிமினல் குற்றச்சாட்டை சட்டமா அதிபர் திணைக்களம் சுமத்த, மறுபுறத்தில் இந்த மோசமான தாக்குதலுக்கான தவறுகளை இழைத்தவர் பட்டியலில் அதே சட்டமா அதிபர் திணைக்களத்தையும் சேர்ந்தமை மூலம், குற்றச்சாட்டு விரலை அத்திணைக்களத்தின் மீதும் நாடாளுமன்றத் தெரிவுக்குழு திருப்பியிருக்கின்றது.

வழக்கமாக பிறதரப்புகள், ஆள்கள் மீது குற்றம் சுமத்தும் வேலையை முன்னெடுப்பது சட்டமா அதிபர் திணைக்களம்தான். ஆனால் பல நூறு அப்பாவிப் பொதுமக்கள் அநியாயமாகக் கொல்லப்படவும், பல நூறுபேர் படுகாயப்படவும், பெரும் சொத்தழிவுகள் நேரவும் காரணமான பெரிய வெள்ளி தாக்குதல் விடயத்திற்கு சட்டமா அதிபர் திணைக்களத்தையும் சேர்த்துக் குற்றம் சுமத்துகின்றது நாடாளுமன்றத் தெரிவுக்குழு என்பது அவதானிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

இந்த விவகாரத்துக்காக அப்போதைய பாதுகாப்புச் செயலரையும், பொலிஸ் மா அதிபரையும் கைது செய்து விளக்கமறியலில் வைத்திருக்கையில், இப்போது வெளியாகியிருக்கும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் அறிக்கையையும், அதில் உள்ள விவரங்களையும் விரிவாக நோக்கினால் ஒரு விடயம் நன்கு தெளிவாகின்றது.

அது – இந்த விவகாரத்தில் சுறா மீன்கள் எல்லாம் வெளியில் சுதந்திரமாக நீந்த, குட்டி நெத்தலிகள்தாம் வலையில் சிக்கியுள்ளன என்பதுதான்.

அதுவும், இவ்விடயத்தில் ஜனாதிபதி, பிரதமர், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர், அரச புலனாய்வு சேவை, அதன் பணிப்பாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிஸங்க ஜயவர்த்தன, சட்டமா அதிபர் திணைக்களத்தினர் என்று பல தரப்பினர் பெரும் தவறிழைத்திருக்கின்றனர் என்ற சாரப்பட நாடாளுமன்றத் தெரிவுக்குழு அப்பட்டமாகக் குற்றம் சுமத்தியுள்ளது.

* பாதுகாப்பு தொடர்பான விடயங்களில் பல சமயங்களில் உரிய தலைமைத்துவத்தைக் கொடுப்பதற்கு ஜனாதிபதி தவறியுள்ளார்.

* அவசர – அவசிய – கூட்டங்களில் இருந்து முக்கிய தனிநபர்களை வெளியேற்றுதல், தேவையற்ற அரசியல் பிரமுகர்களை உட்செலுத்துதல், தேவைக்கேற்ற விதத்தில் தேசிய பாதுகாப்புச் சபைக் கூட்டத்தை நடத்துதல் உட்பட அரசாங்க மற்றும் முறைமைகளை ஜனாதிபதி மிகவும் கீழ்மைப்படுத்தியுள்ளார்.

* அரச புலனாய்வுத் துறையின் சேவைகள் மிக கீழ் மட்டத்தில் மோசமாகவுள்ளன.

* பாதுகாப்புத் துறை மற்றும் புலனாய்வுத் துறைகள் அரசியல் மயமாக்கப்பட்டு, அரசியல் புகுந்து விளையாடத் தாராளமாக இடமளிக்கப்பட்டிருப்பது விலாவாரியாகத் தெரிகின்றது.

* ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் தொடர்பாடல்கள் சீர்குலைந்தமை நடைமுறையில் உள்ள பாதுகாப்புச் கட்டமைப்புகள் மற்றும் முறைமைகளில் நேரடித் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

* பாதுகாப்புக் கவுன்ஸில் கூட்டம் போன்ற முக்கிய கட்டமைப்புகளில் இருந்து தாம் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கின்றார்கள் என்ற உண்மையை நாட்டுக்கும், மக்களுக்கும், நாடாளுமன்றத்துக்கும் பகிரங்கப்படுத்தத் தவறியதன் மூலம் பிரதமர் மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் தவறிழைத்துள்ளனர்.

– இவை உட்படப் பல்வேறு பாரதூரமான குற்றச்சாட்டுகளை விரிவான ஆராய்வுக்குப் பின்னர் நாடாளுமன்றத் தெரிவுக்குழு பகிரங்கமாக அம்பலப்படுத்தியிருக்கின்றது.

அரச புலனாய்வுச் சேவை மட்டுமல்லாமல் ஜனாதிபதியிலிருந்து சட்ட மா அதிபர் திணைக்களத்தினர் வரை பல தரப்பினர் மீதும் சரமாரியான குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுகையில் –

இவ்விவகாரத்துக்காக ஜனாதிபதியும் சட்டமா அதிபர் திணைக்களமும் சேர்ந்து அப்போதைய பாதுகாப்புச் செயலாளரையும், பொலிஸ்மா அதிபரையும் மட்டும் சட்டத்தின் முன் நிறுத்தி விட்டு, தாங்கள் ஏதோ புனிதர்கள் என்பது போல பேசுவது 'சட்டியைப் பார்த்து பானை கறுப்பு என்டதாம்' என்ற கதையை ஒத்ததுதான்!

# நீராவியடிப் பிள்ளையாரில் கிறிஸ்தவரான சுமந்திரனுக்கு அப்படி என்னதான் அக்கறை?

## கேள்வி எழுப்புகிறார் ஞானசார தேரர்

கொழும்பு, ஒக். 25

இந்த நாட்டிலுள்ள தமிழ் மக்களுக்கு எந்தப் பிரச்சினையுமில்லை. மாறாக, விக்னேஸ்வரனுக்கும், சுமந்திரனுக்கும் மட்டுமே பிரச்சினைகள் உள்ளன. கிறிஸ்தவரான சுமந்திரன், முல்லைத்தீவு நீராவியடி இந்து ஆலயத்தில் ஏன் அக்கறை காட்ட வேண்டும் என கேள்வியெழுப்பியுள்ளார் பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர்.



நேற்று முன் தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வடக்கில் தற்போது தனி அரசு காணப்படுகிறது. பிரிவினைவாதத்தை வளர்க்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அடிபணிய வேண்டிய தேவை எமக்கில்லை. தனிநாடு பற்றிப் பேசிச் சட்டத்தை தங்கள் இஷ்டத்திற்கு அவர்கள் நடைமுறைப்படுத்துவதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது.

குருகந்த விகாராதிபதியின் இறுதிக்கிரியைகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சில அரசியல்வாதிகளே குழப்பியடித்தனர். அங்கிருந்த தமிழ்ச் சகோதரர்கள் இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. குருகந்த தேரர் பொதுமக்களுக்குச் சேவை செய்தவர். 11வருடமாக அந்தப் பகுதி மக்களுக்குச் சேவை செய்தாரே தவிர, தனக்காக எதையும் செய்யவில்லை.

வடக்கில் வெறொரு அரசே இருக்கிறது. இந்த அரசின் குதர்க்கமான ஆட்சியின் காரணமாகவே சிங்கள பௌத்தர்களுக்கு இந்த நாட்டில் இடமில்லாமல் போகிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் இந்த நாட்டுக்கு விசுவாசமாக இருப்பதாகச் சத்தியம் செய்துவிட்டு, அநுராதபுரத்துக்கு அப்பால் சென்றவுடன் தனிநாடு பற்றி பேசுவது எந்த வகையில் நியாயமாகும்?

எங்களுக்கு அமுல்படுத்தப்படும் சட்டம் பிரிவினைவாதிகளுக்கு அமுல்படுத்தப்படுவதில்லை. சட்டத்தை தங்கள் இஷ்டத்துக்கு அமுல்படுத்த பிரிவினைவாதிகளுக்கு ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை.

காலம்சென்ற பிக்குவின் இறுதிச்சடங்கில் பௌத்தர்கள் என்ற ரீதியில் செய்யவேண்டியதைச் செய்துவிட்டோம். கூட்டமைப்பினர் அதற்கு எதிராக நீதிமன்றம் சென்றுள்ளனர். அதை நாமும் நீதிமன்றத்தில் சந்திக்கத் தயார். குருகந்த தேரரின் உடல் 3 நாள்களுக்கு வைத்திருக்கும் வகையிலேயே பதப்படுத்தப்பட்டிருந்தது. நீதிமன்றத் தீர்ப்பு தாமதமாகும் என்ற நிலையிலேயே மனிதாபிமான ரீதியில் இறுதிக்கிரியை மேற்கொண்டோம். நாட்டில் பல பகுதிகளிருந்து 200 இற்கும் மேற்பட்ட பிக்குகள் முல்லைத்தீவுக்கு வந்திருந்தனர்.

இந்த விடயத்தில் நான் சிறை செல்லவும் தயாராக இருக்கிறேன். பல தடவைகள் சிறை சென்றுள்ளேன். இதற்காக ஒருபோதும் பயப்பட மாட்டேன். இந்த அரசு இனங்களுக்கிடையில் முறுகலை ஏற்படுத்திக் கொண்டு, வெட்கித் தலைகுனியக் கூடிய வகையில் கைகட்டி பார்த்துக் கொண்டிருக்கிறது. அரசுக்குள் இன்னொரு அரசு இருக்கிறது. பிரிவினைவாதிகள் அவர்களின் நடவடிக்கைகளை தொடர்கின்றனர். அவர்கள் மீது பொலிஸாரும் நடவடிக்கையெடுப்பதில்லை.

வடக்கு – கிழக்கில் பிரிவினைவாதிகள் கடந்த சில வருடங்களாகவே வேரூன்றி விட்டனர். இங்கு குண்டாந்தடியால் மக்களைத் தாக்குவர். அங்கு வெறொரு அரசு செயற்படுவதால் குண்டாந்தடிப் பிரயோகம் அங்கு சரிவராது. இந்த பிரிவனைவாதிகளைத் தடுக்காவிட்டால் மீண்டும் இருண்ட யுகத்துக்குள் செல்ல நேரிடும். இதனால் தமிழ், சிங்கள மக்களே பாதிக்கப்படுவார்கள்.

தமிழ் மக்களிற்கு இங்கு எந்த பிரச்சனையுமில்லை. விக்னேஸ்வரனிற்கும், சுமந்திரனுக்கும் மட்டுமே பிரச்சினைகள் உள்ளன. சுமந்திரன் கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர். இந்து ஆலயம் பற்றி அவர் ஏன் அக்கறை காட்டவேண்டும்? எமக்கெதிராக கூட்டமைப்பு நீதிமன்றத்தை நாடியது தவறான தீர்மானமாகும் – என்றார். (ஐ)

# 11பேர் கடத்தல் விவகாரம் குறித்த வழக்கு நீதித்துறைத் தோல்வியின் அடையாளம்!

## யஸ்மின் சூக்கா காட்டமான கருத்து

ஆரம்பத்தில் 11 பேர் கடத்தல் விவகாரம் குறித்த வழக்கு விசாரணைகள் இலங்கை நீதித்துறையின் மிகப்பெரிய வெற்றியாகக் கருதப்பட்டது. ஆனால் தற்போது அதுவே தோல்வியின் அடையாளமாக மாறியுள்ளதாகச் சர்வதேச உண்மைக்கும், நீதிக்குமான செயற்திட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் யஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார்.



அத்துடன் இவ்வழக்கில் திருகோணமலை கடற்படைப் புலனாய்வுப் பிரிவின் கட்டளைப் பீடப் பொறுப்பதிகாரிகள் உள்ளிட்ட மூத்த கடற்படை அதிகாரிகள் விசாரணைக்கு உட்படுத்தப்படவில்லை. இவ்விவகாரத்துடன் தொடர்புடையவர்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்குப் பாதுகாப்பும், பதவியுயர்வும் வழங்கப்பட்டிருப்பது குறித்தும் அவர் கவலை வெளியிட்டுள்ளார்.

திருகோணமலைக் கடற்படைத்தளத்தில் 11 பேர் காணாமற்போன விவகாரம் தொடர்பில் இலங்கைக்குள் கடந்த 10 வருட காலமாக மேற்கொள்ளப்பட்ட பொலிஸ் விசாரணைகளிலிருந்து பெறப்பட்ட ஆவணங்களை, அங்கிருந்து தப்பியவர்கள் மற்றும் கடற்படைத்தளச் சாட்சியாளர்களிடமிருந்து பெறப்பட்ட வாக்கு மூலங்களுடன் ஒப்பீடு செய்யும் அறிக்கையொன்று முற்றாகப் பாராமுகம் காட்டும் இலங்கைக் கடற்படை' என்ற பெயரில் சர்வதேச உண்மைக்கும், நீதிக்குமான செயற்திட்டத்தினால் வெளியிடப்பட்டது.

இவ்வழக்கு விசாரணையில் இடம்பெற்றிருக்கும் பாரதூரமான தவறுகள், பொருந்தாத தன்மை, அரசியல் தலையீடுகள் போன்றவை அந்த அறிக்கையின் ஊடாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

2009 ஆம் ஆண்டு போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னரும் கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல் செயற்பாடுகள் நிறுத்தப்படவில்லை என்பதுடன், இத்தகைய சித்திரவதைகள் தனியொரு கடற்படைத்தளத்தில் மாத்திரம் இடம்பெறவில்லை என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

**நாளை** 26.10.2019 சனிக்கிழமை

நட்சத்திரம்: உத்தரம் காலை 7.24 வரை
திதி : திரயோதசி பி.ப 2.27 வரை
இராகுகாலம் : 9.03 – 10.33
சுப நேரம் : 3.03 – 4.33

# மின்தடை

யாழ்ப்பாணம், ஒக். 25

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை–

**யாழ் பிரதேசத்தில் -**

சங்கானை வைத்தியசாலை, தொட்டிலடி, முல்லை வைரவர் கோவிலடி பண்டத்தரிப்பு, புனிதநகர், மாதனை, கற்கோவளம், பருத்தித்துறை வெளிச்சவீடு, கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலை, சிவப்பிரகாசம் 3ஆம் குறுக்குத்தெரு ஆகிய இடங்களிலும்,

**கிளிநொச்சி பிரதேசத்தில் -**

முத்துவிநாயகபுரத்தின் ஒரு பகுதியிலும்,

**வவுனியா பிரதேசத்தில் -**

செட்டிக்குளம் நகர பிரதேசத்தின் ஒரு பகுதி ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

# செத்தல் மிளகாய், மீன் தீர்வை வரி குறைப்பு!

கொழும்பு, ஒக். 25

இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருள்கள் சிலவற்றுக்கான தீர்வை வரி குறைக்கப்பட்டுள்ளது.

வாழ்க்கைச் செலவுக்குழுவினால் இதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய இறக்குமதி செய்யப்படும் செத்தல் மிளகாய்க்கான தீர்வை வரியை 25 ரூபாவிலிருந்து 5 ரூபா குறைத்து 20 ரூபாயாக அறவிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதேபோன்று, இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோகிராம் மீனுக்கான தீர்வை வரியை 100 ரூபாவிலிருந்து 25 ரூபா குறைத்து 75 ரூபாவாக அறவிடவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# யாழ் இந்துவில் இன்று தமிழ்த் தினம்

யாழ்ப்பாணம், ஒக். 25

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் தமிழ்த்தின நிகழ்வு இன்று காலை 8.30 மணி முதல் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் கல்லூரி அதிபர் இ. செந்தில்மாறன் முன்னிலையில் கல்லூரி தமிழ்ச் சங்கத்தின் தலைவர் செல்வன் ஜெ. கிஷோக் தலைமையில் நடைபெறும்.

தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானம் மற்றும் சிவபூமி அறக்கட்டளை ஆகியவற்றின் தலைவர் செஞ்சொற்சேல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பிப்பார்.

# கொக்குவில் இந்துவில் இன்று பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஒக். 25

கொக்குவில் இந்துக் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழா இன்று காலை 8.30 மணிக்கு கல்லூரியின் பஞ்சலிங்கம் அரங்கத்தில் கல்லூரி அதிபர் எம்.ஞானசம்பந்தன் தலைமையில் நடைபெறும்.

கல்வி அமைச்சின் திட்டப் பணிப்பாளர் கந்தையா பத்மநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

நல்லூர் பிரிவு கல்வி அதிகாரி ஈ.எக்ஸ்.அன்ரன், கல்லூரி பழைய மாணவியான சட்டத்தரணி செல்வி ஞானலோஜினி சிவஞானம், கல்விக் காருண்யன் ஈ.எஸ்.பி.நாகரத்தினம் ஆகியோர் பங்கு பற்றுவர்.

தேர்தல் திணைக்களத்தின் ஓய்வு பெற்ற அதிகாரி திருமதி. சித்ரா பத்மநாதன் பரிசில்களை வழங்கி மாணவர்களைக் கௌரவிப்பார்.

# போராட்டத்தைச் சிதைக்க வெளிநாட்டுலிருந்து பணம்!

## காணாமற்போனோரின் உறவுகள் குற்றச்சாட்டு



கிளிநொச்சி, ஒக். 25

வெளிநாட்டு பணத்தைப் பெற்றுக் கொண்டு தமது போராட்டத்தை சிதைக்கும் நோக்குடன் ஒரு குழு செயற்படுவதாகக் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் குற்றம்சாட்டியுள்ளனர்.

கிளிநொச்சியில் அமைந்துள்ள வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்க அலுவலகத்தில் நடந்த ஊடக சந்திப்பில், வடக்கு – கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத் தலைவி கலாரஞ்சினி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

எமது போராட்டத்தை வலுவிழக்கச் செய்து சிதைக்கும் நோக்குடன் புதிதாக ஒரு தரப்பு வெளிநாட்டுப் பணத்தைப் பெற்றுக் கொண்டு செயற்படுகின்றனர். இந்தச் செயற்பாடு இதுவரை காலமும் முன்னெடுக்கப்பட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் செயற்பாடுகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதுவரை காலமும் எமது பிள்ளைகளுக்காக வீதிகளில் நின்று போராட்டத்தை முன்னெடுத்த பெற்றோர்கள் இன்றும் கண்ணீருடன் வாழ்கின்றனர். இவ்வாறான நிலையில் வெளிநாடுகளிலிருந்து வழங்கப்படும் பணத்திற்காகப் போராட்டத்தைச் சிதைக்கும் நோக்குடன் சிலர் செயற்படுகின்றனர். அவர்களை இனங்கண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் – என்றார். (ஐ)

# நள்ளிரவில் நேருக்கு நேர் மோதிய இரண்டு பஸ்கள்!

## ஒருவர் பலி, 60பேர் படுகாயம்





கொழும்பு, ஒக். 25

மின்னேரியாவில் நேற்று முன்தினம் இரவு இரண்டு பஸ்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியதில் பஸ் சாரதி ஒருவர் சம்பவ இடத்தில் உயிரிழந்தார். 60 க்கும் மேற்பட்ட பயணிகள் படுகாயம் அடைந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மின்னேரிய பொலிஸ் நிலையத்துக்கு அண்மையில், நேற்று முன் தினம் இரவு 11.30 மணியளவில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது. கல்முனையில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த தனியாருக்குச் சொந்தமான பஸ் வண்டியும் கொழும்பில் இருந்து கல்முனையை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் வண்டியும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகத் தெரியவருகின்றது.

இரண்டு பஸ்களும் பலத்த சேதத்துக்கு உள்ளாகியுள்ளமையுடன் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான சாரதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். இரண்டு பஸ்களில் பயணித்த 60 க்கும் மேற்பட்ட பயணிகள் படுகாயம் காயமடைந்த நிலையில் பொலன்னறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அனுமதிக்கப்பட்டுள்ளவர்களில் சிலர் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

விபத்துச் சம்பவம் தொடர்பில் மின்னேரியா பொலிஸ் நிலையப் போக்குவரத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

# களுவாஞ்சிக்குடி படுகொலை நினைவேந்தல் அனுஷ்டிப்பு

மட்டக்களப்பு, ஒக். 25

மட்டக்களப்பு – களுவாஞ்சிக்குடிப் பகுதியில் 1987ஆம் ஆண்டு இந்திய படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 30 பொது மக்களின் நினைவுதினம் நேற்று முன் தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

படுகொலை செய்யப்பட்ட பொதுமக்களின் நினைவுத் தூபியருகே இராசமாணிக்கம் மக்கள் அமைப்பின் தலைவர் இரா.சாணக்கியன் தலைமையில் நினைவுகூரல் நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது ஈகச்சுடர் ஏற்றப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டவர்கள் நினைவு கூரப்பட்டனர். இந்த நிகழ்வில் களுவாஞ்சிகுடிப் பிரதேச பொதுமக்கள், உயிரிழந்தவர்களின் உறவினர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

23.10.1987ஆம் ஆண்டு களுவாஞ்சிகுடியில் இந்தியப் படையினரால் பட்டிருப்புத் தொகுதியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாள் தலைவருமான இராசமாணிக்கத்தின் மகனான சக்கரவர்த்தி உட்பட 30 பொதுமக்களை இந்திய இராணுவத்தினர் சுட்டுக் கொலை செய்தனர்.

இந்திய இராணுவத்தினரை இலக்கு வைத்து கண்ணிவெடித் தாக்குதல் நடத்தப்பட்டதைத் தொடர்ந்து பொதுமக்கள் மீது இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. இந்தத் தாக்குதலில் சிறுவர்கள், பெரியவர்கள், பெண்கள் என 30பேர் கொல்லப்பட்டனர். (ஐ)





## தமிழகத்தில் இடைத்தேர்தல்:

# இரண்டு தொகுதிகளிலுமே அ.தி.மு.க. அமோக வெற்றி!

| விக்கிரவாண்டி (தமிழ்நாடு ) | | | |
|---|---|---|---|
| கட்சிகள் | வேட்பாளர் | ஓட்டுக்கள் | 2016 முடிவுகள் |
| அதிமுக | முத்தமிழ்ச் செல்வன் | 1,13,428(வெற்றி) | - |
| திமுக | புகழேந்தி | 68,646 | திமுக வெற்றி |
| நாம் தமிழர் | கந்தசாமி | 2,913 | - |

| நாங்குநேரி (தமிழ்நாடு ) | | | |
|---|---|---|---|
| கட்சிகள் | வேட்பாளர் | ஓட்டுக்கள் | 2016 முடிவுகள் |
| அதிமுக | ரெட்டியார்பட்டி நாராயணன் | 94, 802 (வெற்றி) | - |
| காங்கிரஸ் | ரூபி மனோகர் | 61, 991 | காங்., வெற்றி |
| நாம் தமிழர் | ராஜ நாராயணன் | 2, 796 | - |

தமிழ்நாட்டில் கடந்த திங்களன்று நடைபெற்ற இரண்டு சட்டசபைத் தொகுதிகளுக்கான இடைத்தேர்தல்களில் ஆளும் அ.தி.மு.க. பெரு வெற்றியீட்டியுள்ளது.

விக்கிரவாண்டித் தொகுதியில் தி.மு.க. வேட்பாளரை சுமார் 45 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் அ.தி.மு.க. தோற்கடித்தது.

அதேபோல் நாங்குநேரி தொகுதியில் தி.மு.கவின் கூட்டணிக் கட்சியான காங்கிரஸின் வேட்பாளரை சுமார் 32 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் அ.தி.மு.க. தோற்கடித்தது.

## ஹரியானாவில் தொங்கு சட்டசபை!

ஹரியானாவில் திங்களன்று நடந்த சட்டப்பேரவைத் தேர்தலின் வாக்குகள் நேற்று எண்ணப்பட்ட நிலையில் 90 தொகுதிகளின் முன்னிலை நிலைவரம் வெளியாகியது. எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிட்டவில்லை.

அங்கு பா.ஜ.க. – காங்கிரஸ் இடையே கடும் போட்டி நிலவுகிறது. ஆளும் பா.ஜ.க. 41 இடங்களிலும் காங்கிரஸ் 31 இடங்களிலும் முன்னிலையில் உள்ளன. ஜனநாயக ஜனதா கட்சி 10 இடங்களில் முன்னிலையில் உள்ளது. மற்றவர்கள் 8 இடங்களில் முன்னிலை பெற்று உள்ளனர். எளிதில் ஆட்சி அமைக்கும் என எதிர்பார்க்கப்பட்ட பா.ஜ.கவுக்கு தற்போது சிக்கல் உருவாகியுள்ளது. கூட்டணி ஆட்சி அமைக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

பின்னடைவு காரணமாக தேர்தல் முடிவுகளை ஏற்றுக்கொண்டு ஹரியானா பா.ஜ.க. தலைவர் சுபாஷ் பராலா பதவி விலகி உள்ளார்.

காங்கிரஸ் இடைக்காலத் தலைவர் சோனியா காந்தி, ஹரியானா முன்னாள் முதல்வர் பூபிந்தர் சிங் ஹூடாவுடன் பேசினார் எனவும், சாத்தியமான கூட்டணிக் கட்சிகளை ஆட்சி அமைப்பதற்காகச் சேர்த்து கொள்வதற்கு அவருக்கு முழு சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

ஜனநாயக ஜனதா கட்சி தலைவர் துஷ்யந்த் சவுதலா, இந்திய தேசிய லோக்தள கட்சியின் தலைவர் ஓம் பிரகாஷ் சவுதாலாவின் பேரனாவார். குடும்ப சண்டையில் இந்திய தேசிய லோக்தள கட்சியில் இருந்து வெளியேறிய துஷ்யந்த் ஓராண்டுக்கு முன்பாக ஜனநாயக ஜனதா கட்சியை தொடங்கினார். தற்போது அவரது பாரம்பரிய குடும்ப கட்சியான லோக்தளத்தை விடவும், அதிக இடங்களில் துஷ்யந்தின் கட்சி முன்னிலை வகித்து வருகிறது.






## மஹாராஷ்டிராவில் மீண்டும் பா.ஜ.க. - சிவசேனா ஆட்சி



மும்பை,ஒக்.25

மஹாராஷ்டிரா சட்டசபைத் தேர்தலில் பா.ஜ.க. – சிவசேனா கூட்டணி வெற்றி பெற்று, மீண்டும் ஆட்சி அமைப்பது உறுதியாகி உள்ளது.

மொத்தம் 288 தொகுதிகளைக் கொண்ட மஹாராஷ்டிரா சட்டசபைக்கான தேர்தலில் நேற்று மதியம் வரையான வாக்கு எண்ணிக்கையின்படி 185க்கும் அதிகமான இடங்களில் பா.ஜ.க கூட்டணி முன்னிலையில் இருந்தது.

இதில் பா.ஜ.க. மட்டும் 104 இடங்களுக்கும் மேல் முன்னிலையில் உள்ளது. சிவசேனா 62 இடங்களில் முன்னிலையில் உள்ளது. ஆட்சி அமைப்பதற்கு தேவையான பெரும்பான்மை 145 என்ற நிலையில், பெரும்பான்மைக்கும் அதிகமான இடங்களில் பா.ஜ.க. – சிவசேனா கூட்டணி முன்னிலையில் உள்ளது. தேசியவாத காங்கிரஸ் 50 இடங்களிலும், காங்கிரஸ் 40 இடங்களிலும் முன்னிலையில் இருந்தன..

தனிப்பெரும்பான்மையுடன் பா.ஜ.க. ஆட்சி அமைக்க வாய்ப்பு இருந்தாலும், கூட்டணி




கட்சியான சிவசேனாவிற்கு இம்முறை ஆட்சியை விட்டுக் கொடுக்கும் என்றே கூறப்படுகிறது. வாக்கு எண்ணிக்கை நிறைவடைந்த பிறகு இரு கட்சிகளும் கூடி, யாருக்கு முதல்வர் பதவி என்பதை ஆலோசித்து முடிவு செய்யும் என்று கூறப்பட்டது.

## புதுச்சேரி இடைத்தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கு வெற்றி




புதுச்சேரி,ஒக்.25

புதுச்சேரி சட்டசபையின் காமராஜ் நகர் தொகுதியில் நடைபெற்ற இடைத்தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளர் ஜான்குமார் 7,171 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார்.

புதுச்சேரி காமராஜ் நகர் தொகுதியில் எம்.எல்.ஏ.வாக இருந்த வைத்திலிங்கம் நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றமையால் தனது எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்தார். இதனால் காலியான காமராஜ் நகர் தொகுதிக்கு கடந்த திங்களன்று வாக்கு பதிவு நடந்தது.

இதற்கான வாக்கு எண்ணிக்கை நேற்று நடைபெற்றது. காங்கிரஸ் கட்சியின் வேட்பாளர் ஜான்குமார் 14,782 வாக்குகளும், என்.ஆர். காங்கிரஸ் கட்சியின் வேட்பாளர் புவனேஸ்வரன் 7,611 வாக்குகளும், நாம் தமிழர் வேட்பாளர் 392 வாக்குகளும் பெற்றனர்.

காங்கிரஸ் கட்சி வேட்பாளர் ஜான்குமார், என்.ஆர். காங்கிரஸ் கட்சியின் வேட்பாளர் புவனேஸ்வரனை விட 7,171 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார்.

# தொழில் தொடங்க உகந்த நாடுகளின் பட்டியலில் இந்தியா துரித முன்னேற்றம்




வொஷிங்டன்,ஒக்.25

தொழில் தொடங்க உகந்த நாடுகளுக்கான உலக வங்கியின் தரவரிசைப் பட்டியலில் 14 இடங்கள் முன்னேறியுள்ள இந்தியா, 63 ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

2014ஆம் ஆண்டில் நாட்டின் பிரதமராக நரேந்திர மோடி பதவியேற்ற போது தொழில் தொடங்க உகந்த நாடுகள் பட்டியலில் 190 நாடுகளில் 142 ஆவது இடத்தில் இந்தியா இருந்தது. 2017ஆம் ஆண்டில் 130 ஆவது இடத்திற்கு முன்னேறிய இந்தியா, 2018 இல் 100ஆவது இடத்திற்கு முன்னேற்றம் கண்டது.

2019ஆம் ஆண்டுக்கான தரவரிசைப் பட்டியலில் 77 ஆவது இடத்தை இந்தியா பிடித்தது. இந்த நிலையில் 2020ஆம் ஆண்டுக்கான தரவரிசைப் பட்டியலை உலக வங்கி வெளியிட்டுள்ளது. அதில் 14 இடங்கள் முன்னேறியுள்ள இந்தியா 63 ஆவது இடத்தில் உள்ளதாக உலக வங்கி தெரிவித்துள்ளது.

தொழில் தொடங்க உகந்த சூழலை உருவாக்குவதற்காக சிறப்பாக செயல்படும் நாடுகள் பட்டியலில் தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக இந்தியா முதல் 10 இடங்களில் உள்ளது. இதுபோன்ற வெற்றியை கடந்த 20 ஆண்டுகளில் மிகச் சில நாடுகளே பெற்றிருக்கின்றன எனவும், அவை மக்கள் தொகை வாரியாக சிறிய நாடுகள் என்றும் உலக வங்கி குறிப்பிட்டுள்ளது.

பிரதமர் மோடியின் 'மேக் இன் இந்தியா' திட்டத்தால், அந்நிய முதலீடு ஈர்ப்பு, உற்பத்தி துறை ஊக்குவிப்பு மட்டும் அல் லாமல், போட்டித் திறன் அதிகரித்திருப் பதாகவும் உலக வங்கி கூறியுள்ளது. இன்னும் பல சீர்திருத்த நடவடிக்கைகளை எடுக்கும் பட்சத்தில் அடுத்த ஓரிரு ஆண் டுகளில் முதல் 50 இடங்களை இந்தியா பிடிக்க வாய்ப்பு இருப்பதாக உலக வங்கி கணித்துள்ளது.

தொழில் தொடங்க உகந்த சூழலை உருவாக்குவதற்காக சிறப்பாக செயல்படும் நாடுகளின் பட்டியலில் சவுதி அரே பியா(62), ஜோர்டான்(75), டோஹா(97), பஹ்ரைன்(43), தஜிகிஸ்தான்(106), பாகிஸ்தான்(108), குவைத்(83), சீனா(31), நைஜீரியா(131) ஆகிய நாடுகளும் உள்ளன.

கணிசமான முன்னேற்றம் காணப்பட்டாலும், ஒப்பந்தங்களை அமல்படுத் துதல் (163 ஆவது இடம்) மற்றும் சொத்துக்களை பதிவு செய்தல் (154 ஆவது இடம்) போன்ற பிரிவுகளில் இந்தியா இன்னும் பின்தங்கியிருக்கிறது.

## சிரியா எல்லையில் இருந்து குர்து படைகள் முற்றிலுமாக வெளியேற்றப்படும் எனத் துருக்கி அதிபரிடம் புடின் உறுதி



மொஸ்கோ,ஒக்.25

சிரியா எல்லையில் இருந்து குர்து படைகள் முற்றிலுமாக வெளியேற்றப்படும் என துருக்கி அதிபரிடம் ரஷ்ய அதிபர் புடின் உறுதியளித்துள்ளார்.

சிரியாவின் வடக்கு பகுதியில் உள்ள குர்து படையினரைக் குறிவைத்து, துருக்கி இராணுவம் தொடர்ந்து தாக்குதல் நடத்தியது. அமெரிக்கா கொடுத்த அழுத்தத்தை தொடர்ந்து, 5 நாள்களுக்கு சண்டை நிறுத்தத்தை துருக்கி அறிவித்தது.

இந்த 5 நாள்களுக்குள் பாதுகாப்பு மண்டலம் என வரையறுக்கப்பட்டுள்ள பகுதியில் இருந்து குர்துக்கள் வெளியேற வேண்டும் எனத் துருக்கி கூறியது. அதன்படி துருக்கியின் எல்லையையொட்டி சிரியாவின் வடக்கு பகுதியில் அமைந்துள்ள ராஸ் அல் – அய்ன் நகரில் இருந்து குர்து படைகள் வெளியேறின.

இந்த நிலையில் துருக்கி அதிபர் தாயீப் எர்டோகன் நேற்று முன்தினம் ரஷ்யாவுக்குச் சென்றார். அந்த நாட்டின் கடற்கரை நகரமான சோச்சியில் உள்ள நட்சத்திர விடுதியில் அதிபர் புடினை, தாயீப் எர்டோகன் சந்தித்துப் பேசினார். அப்போது சிரியா எல்லையில் இருந்து குர்து படைகள் முற்றிலுமாக வெளியேற்றப்படும் என புடின் உறுதியளித்தார். இது தொடர்பாக துருக்கி மற்றும் ரஷ்யா இடையே வரலாற்று சிறப்பு மிக்க ஒப்பந்தம் கையெழுத்தானது.

இந்தப் பேச்சைத் தொடர்ந்து ரஷ்ய அதிபர் புடின், சிரிய அதிபர் பார் அல் ஆசாத்திடம் தொலைபேசி வாயிலாக பேசினார் எனவும், அப்போது சிரிய எல்லையில் ரஷ்யப் படைகளுடன் இணைந்து பணியாற்றத் தயாராக இருப்பதாக ஆசாத் தரப்பில் கூறப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## ஹொங்கொங் போராட்டத்துக்கு காரணமானவர் விடுதலை: நிர்வாகத் தலைவரை பதவியில் இருந்து மாற்ற சீனா முடிவு?

ஹொங்கொங் போராட்டத்துக்கு வித்திட்டவர் விடுதலை செய்யப்பட்டார். இந்த சூழலில் ஹொங்கொங்கின் நிர்வாகத் தலைவரை மாற்ற சீனா முடிவு செய்துள்ளதா என்பது குறித்த தகவல் வெளியாகி உள்ளது.

ஹொங்கொங்கில் கைதிகள் பரிமாற்ற சட்டதிருத்த பிரேரணைக்கு எதிர்ப்புத் தெரிவித்துப் போராட்டம் வெடித்ததும், அதனைத் தொடர்ந்து சர்ச்சைக்குரிய அந்தப் பிரேரணை கைவிடப்பட்டதும் தெரிந்தவையே.

குற்ற வழக்குகளில் தொடர்புடையவர்கள் என்று சந்தேகிக்கப்படும் நபர்களை சீனா மற்றும் தைவானுக்கு நாடு கடத்த வழிவகை செய்வதற் கான சட்டத் திருத்தப் பிரேரணை கோண்டுவரப்படக் காரணமாக இருந்தவர் சான் டோங் காய் (வயது 20).

ஹொங்கொங்கைச் சேர்ந்த இவர் கடந்த ஆண்டு தைவானில் கர்ப்பிணிக் காதலியைக் கொலை செய்துவிட்டு ஹொங்கொங்குக்குத் தப்பி வந்ததார் எனக் குற்றம் சாட்டப்பட்டது. அத்துடன் காதலியின் கிரெடிட் கார்டில் இருந்து பணம் எடுத்ததார் என பணமோசடி வழக்கும் தொடரப்பட்டது.

இதில் பண மோசடி வழக்கில் அவர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். சான் டோங் காய் மீதான கொலை வழக்குக்காக அவரை தைவானுக்கு நாடு கடத்துவதற்காகவே கைதிகள் பரிமாற்ற சட்டத் திருத்தப் பிரேரணை கொண்டு வரப்பட்டது. இது தான் அங்கு மாபெரும் போராட்டத்துக்கு வித்திட்டது.

இந்த நிலையில், சான் டோங் காயை ஹொங்கொங. நீதிமன்றம் நேற்று முன்தினம் விடுதலை செய்தது. சிறையில் இருந்து வெளியே வந்த சான் டோங் காய், பாதிக்கப்பட்ட தனது காதலியின் குடும்பத்திடம் மன்னிப்பு கேட்டமையோடு, தன் மீதான குற்றச்சாட்டைத் தைவானில் எதிர்கொள்ளத் தாம் தயாராக இருக்கிறார் எனவும் தெரிவித்தார். அதாவது அவர் தாமாகவே தைவானுக்குச் சென்று பொலிஸில் சரணடைவார் என்று தெரிவிக்கப்பட்டு உள்ளது.

இதற்கிடையே சர்ச்சைக்குரிய கைதிகள் பரிமாற்ற சட்ட திருத்தப் பிரேரணை ஹொங்கொங. நாடாளுமன்றத்தில் நேற்று முறைப்படி வாபஸ் பெறப்பட்டது. இதனை ஜனநாயக ஆர்வலர்கள் வரவேற்று உள்ளனர்.



இந்த நிலையில் ஹொங்கொங்கில் நிலவும் அசாதாரண சூழ்நிலைக்கு மத்தியில் அதன் நிர்வாக தலைவர் கேரி லாமை பதவியில் இருந்து நீக்கிவிட்டு வேறுநபரை பணியமர்த்த மத்திய அரசான சீனா முடிவு செய்திருப்பதாக செய்திகள் வெளியாகி உள்ளன. எனினும் இது குறித்து சீனா தரப்பிலோ அல்லது ஹொங்கொங் தரப்பிலோ அதிகாரபூர்வ தகவல்கள் ஏதும் வெளியிடப்படவில்லை.

## டென்மார்க்கில் கலங்கரை விளக்கம் அடியோடு பெயர்த்து நகர்த்தப்பட்டது



டென்மார்க்கில் கலங்கரை விளக்கம் ஒன்று நகர்த்தப்பட்ட சம்பவம் நிகழ்ந்துள்ளது.

டென்மார்க் நாட்டின் வடக்கு ஜட்லேண்ட் பிராந்தியத்தில் உள்ள கடற்கரை நகரில் 120 ஆண்டுகள் பழமையான கலங்கரை விளக்கம் உள்ளது. 'ரப்ஜெர்க் நியூடு' என்று அழைக்கப்படும் இந்த கலங்கரை விளக்கம் புகழ்பெற்ற சுற்றுலா மையமாக விளங்குகிறது. ஆண்டு தோறும் சுமார் 2 லட்சத்து 50 ஆயிரம் பேர் 'ரப்ஜெர்க் நியூடு' கலங்கரை விளக்கத்தைப் பார்த்துச் செல்கின்றனர்.

இந்த நிலையில் மணல் அரிப்பு காரணமாக இந்த கலங்கரை விளக்கம் மெல்ல, மெல்ல சரிந்து மொத்தமாகஜ் கடலில் விழும் அபாய நிலைக்கு தள்ளப்பட்டு உள்ளது. ஆரம்பத்தில் கடலில் இருந்து 200 மீற்றர் தொலைவில் இருந்த கலங்கரை விளக்கம், மணல் அரிப்பு காரணமாக தற்போது 2 மீற்றர் தொலைவில் இருக்கிறது.

எனவே இந்தக் கலங்கரை விளக்கத்தைச் சேதப்படுத்தாமல், அப்படியே பெயர்த்து எடுத்து நகர்த்தி பாதுகாப்பான இடத்தில் வைக்க டென்மார்க் அரசு முடிவு செய்தது. அதற்காக ஏழரை லட்சம் அமெரிக்க டாலர் (இலங்கை ரூபா மதிப்பில் ரூ.13 கோடியே 15 லட்சம்) ஒதுக்கீடு செய்யப்பட்டு, செவ்வாயன்று பணிகள் தொடங்கின.

தண்டவாளம் போன்ற அமைப்பை ஏற்படுத்தி அதன் மூலம் 720 தொன் எடைகொண்ட அந்தஜ் கலங்கரை விளக்கத்தை 70 மீற்றர் தொலைவுக்கு நகர்த்தும் பணிகள் நடந்தன. கடுங்குளிர் காற்றையும் பொருட்படுத்தாமல், கலங்கரை விளக்கத்தை பெயர்த்தெடுக்கும் நிகழ்வை நூற்றுக்கும் மேற்பட்ட சுற்றுலா பயணிகள் ஆர்வத்துடன் கண்டு ரசித்தனர்

# ஜெருசலம் அருகே அகழ்வாராய்ச்சியில் வெளிவந்த பழமைவாய்ந்த தேவாலயம்!



இஸ்ரேலில் வீரமரணமடைந்த ஒருவரின் நினைவாகக் கட்டப்பட்ட மிகவும் பழமைவாய்ந்த தேவாலயத்தை அகழ்வாராய்ச்சியின்போது ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்தனர்.

ஜெருசலேம் நகரிலிருந்து சுமார் 10 மைல் தொலைவில் உள்ள இடத்தில் ஆராய்ச்சியாளர்கள் கடந்த 3 ஆண்டுகளாக அகழ்வாராய்ச்சி மேற்கொண்டு வருகின்றனர்.

அங்கு நடத்திய தொடர் அகழ்வாராய்ச்சியில் சுமார் 6 ஆம் நூற்றாண்டில் வீரமரணமடைந்த ஒருவரின் நினைவாகக் கட்டப்பட்ட அழகிய தேவாலயம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மொசைக் கற்களை பயன்படுத்தி பறவைகள், பழங்கள் மற்றும் மரங்களில் ஓவியங்கள் வரையப்பட்டிருந்த அந்த ஆலயத்தினுள், வீரமரணமடைந்தவரின் சடலம் வைத்து பாதுகாக்கப்பட்டிருக்கலாம் என ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது வீரமரணமடைந்தவரின் விவரம் அறிய ஆராய்ச்சியாளர் தொடர் ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.

# அமெரிக்காவில் கடும் பனிப்பொழிவு

அமெரிக்காவில் நிலவும் கடும் பனிப்பொழிவால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கைப் பாதிக்கப்பட்டுள்ளதை அடுத்து குளிர்கால புயல் எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் கொலொரடோ மாநிலத்தில் உள்ள Douglas County பகுதியில் கடுமையான பனிப்பொழிவு நிலவி வருகிறது. பெரும்பாலான பகுதியில் உள்ள சாலைகளை அடர் பனி ஆக்கிரமித்துள்ளதாலும், பனிப்பொழிவு அளவுக்கு அதிகமாக இருப்பதாலும் வாகன ஓட்டிகள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

இந்நிலையில், வெளியே செல்வது ஆபத்தானது என்று கூறப்பட்டு வரும் வேளையில் குளிர்கால புயல் எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

அதேநேரம் Douglas County பகுதியில் குளிர்ந்த வெப்பநிலை இருந்த நிலையில் மைனஸ் 6.6 டிகிரி செல்சியஸ் அளவிற்கு வெப்பநிலை மேலும் குறைந்துள்ளது.



# சிறிய விமானம் விழுந்து நொறுங்கியதில் ஐந்து பயணிகள் சாவு; ஒருவர் தப்பினார்



மெக்ஸிகோவில் சிறிய ரக விமானம் ஒன்று விழுந்து நொறுங்கி விபத்துக்குள்ளானதில், அதில் பயணித்த 5 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

டூராங்கோ(Durango) மாநிலத்திலிருந்து நேற்று முன்தினம் மதியம் விமானி உள்ளிட்ட 6 பேருடன் சிறிய ரக விமானம் ஒன்று குயெர்ரோ (Guerro) நோக்கிப் புறப்பட்டது. புறப்பட்ட சிறிது நேரத்திலேயே விமான நிலையக் கட்டுப்பாட்டின் தொடர்பை இழந்த விமானம், Michoacan என்ற இடத்தில் விழுந்து நொறுங்கியது.

இந்தக் கோர விபத்தில், விமானத்தில் பயணித்த 6 பேரில் 5 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். தற்போது விமானத்தின் இறக்கை உள்ளிட்ட சில பாகங்களை அங்குள்ள ஆற்றில் கண்டெடுத்துள்ள அதிகாரிகள், விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# இங்கிலாந்தில் கென்டெய்னர் லொறியில் கண்டு பிடிக்கப்பட்ட 39 மனித உடல்கள்!

இங்கிலாந்தில் உள்ள எஸ்ஸெக்ஸ் கவுண்டியில் ஒரே கென்டெய்னர் லொறியில் இருந்து 39 பேரின் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இறந்தவர்களில் 38 பேர் பெரியவர்கள் என்றும் ஒருவர் பதின்ம வயதைச் சேர்ந்தவர் என்றும் ஆரம்பகட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



உயிருடன் யாரேனும் மீட்கப்பட்டுள்ளனரா என்று இது வரை காவல்துறை எதையும் தெரி விக்கவில்லை.

இறந்தவர்கள் யார் என்று அடையாளம் காணும் முயற்சியில் தாங்கள் ஈடுபட்டுள்ளனர் எனவும், அதற்கான நடைமுறைகளுக்கு நீண்ட நேரம் ஆகலாம் எனவும் ஆண்ட்ரூ மரைனர் எனும் காவல் அதிகாரி தெரிவித்துள்ளார். அந்த வாகனத்தின் சாரதி கொலைக் குற்றத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார். 25 வயதாகும் அந்த நபர் வடக்கு அயர்லாந்தைச் சேர்ந்தவர்.

பல்கேரியாவில் இருந்து வந்த இந்த வாகனம் ஹோலிஹெட் எனும் இடத்தின் வழியாக இங்கிலாந்துக்குள் நுழைந்ததாக எஸ்ஸெக்ஸ் காவல் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

உள்ளூர் நேரப்படி அதிகாலை 1.40 மணிக்கு ஈஸ்டர்ன் அவென்யூ எனும் இடத்தில் உள்ள வாட்டர் கிலேட் தொழிற் பூங்காவில் இந்த இறந்த உடல்கள் அடங்கிய கென்டெய்னர் கண்டுபிடிக்கப்பட்டது.

இப்போது அந்த இடம் காவல் துறையின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டு, அந்த தொழிற் பூங்காவுக்குள் தொழிலாளர்கள் யாரும் அனுமதிக்கப்படவில்லை.

இதேபோல ஜூன் 2000ல், சீனக் குடியேறிகள் 58 பேர் மூச்சுத் திணறி இறந்த நிலையில் டோவர் எனும் இடத்தில் கென்டெய்னர் லொறி ஒன்றில் சடலங்களாகக் கண்டெடுக்கப்பட்டனர்.

கொலைக் குற்றத்தில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் அந்த வாகனத்தின் நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த ஓட்டுநர் அடுத்த ஆண்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

# மெக்ஸிக்கோவில் சர்வதேச கோமாளிகள் மாநாடு

மெக்ஸிக்கோவில் நடைபெற்று வரும் '24வது சர்வதேச கோமாளி மாநாட்டில்' உலகம் முழுவதிலுமிருந்து ஏராளமான மக்கள் கோமாளி வேடமிட்டுக் கலந்து கொண்டனர்.

நகைச்சுவைத் திறனுடன் கோமாளி வேடமிட்டு மக்களை மகிழ்விக்கும் சிலர், அதன்மூலம் கிடைக்கும் சிறிய வருமானத்தை கொண்டு தங்கள் குடும்பத்தை நடத்தி வருகின்றனர். மெக்ஸிக்கோவிலும் பல ஆயிரக்கணக்கான மக்கள் கோமாளி வேடமிட்டு, மாயாஜால திறமையைப் பயன்படுத்தி குழந்தைகள், சிறுவர்கள், பெரியோர் என ஏராளமானோரை மகிழ்வித்தும் வருகின்றனர்.

இவர்களின் தொழிலை வளர்க்கவும், பிற நாடுகளில் இத்தொழில் செய்வோருடன் அறிமுகம் ஏற்படுத்திக் கொடுத்து தொழில் நுணுக்கங்களை கற்று கொள்ள ஏதுவாகவும் ஆண்டுதோறும் சர்வதேச கோமாளி மாநாடு நடத்தப்படுவதுண்டு. அந்தவகையில் மெக்ஸிக்கோவில் நடைபெற்று வரும் மாநாட்டில் பங்கேற்க வந்த கோமாளிகள் தெருக்களில் நடனமாடி மக்களை மகிழ்வித்தனர்.



# ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலில் இந்திய தூதரகமும் இலக்கு!

## தெரிவுக்குழு அறிக்கையில் தகவல்



கொழும்பு, ஒக். 25

கொழும்பில் உள்ள இந்தியத் தூத ரகமும், இந்தியர்கள் அடிக்கடி வந்து செல்லும் விடுதி ஒன்றும், ஈஸ்டர் ஞாயிறு குண்டுதாரிகளால் இலக்கு வைக்கப் பட்டிருந்ததாக, 21/4 தாக்குதல் குறித்து விசாரித்த நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

தெரிவுக்குழுவின் அறிக்கை நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த அறிக்கையிலேயே, கிடைத் துள்ள புலனாய்வு அறிக்கைகளின் படி, இந்தியத் தூதரகமும் வாய்ப்புள்ள இலக்குகளில் ஒன்றாக இருந்ததாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அரச புலனாய்வுச் சேவையின் பணிப்பாளர், ஏப்ரல் 9ஆம் திகதி 'உயர் இரகசியம்' என, பொலிஸ்மா அதிபர், மற்றும் தேசிய புலனாய்வுத் தலைவர், குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தின் பணிப்பாளர் ஆகியோருக்கு அனுப்பிய கடிதத்தில், தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் சஹ்ரான் காசிம் தேவாலயங்கள், இந்தியத் தூதரகத்தை இலக்கு வைத்துத் தற்கொலைக் குண் டுத் தாக்குதல்களை நடத்த திட்டமிட்டுள்ளார் எனக் கூறப்பட்டிருந்தது.

எனினும் அந்தக் கடிதத்தில், தாக் குதல் தொடர்பான நாள் குறிப்பிடப்படவில்லை. ஆனால் தற்கொலைத் தாக்குதல், கத்தி தாக்குதல், பாரஊர்தித் தாக்குதல் நடக்கலாம் என – தாக்குதல் நடத்தக் கூடிய விதம் குறித்துக் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஏப்ரல் 21ஆம் திகதி தாக்குதல் நடப்பதற்கு 12 நாள்களுக்கு முன்னர் இந்தக் கடிதம் அனுப்பப்பட்டது.

எனினும் பாரிய தாக்குதல் நடப்பதற்கு முதல் நாளான ஏப்ரல் 20ஆம் திகதி, அரச புலனாய்வுச் சேவையின் பணிப்பாளர் ஒரு தகவல் மூலத்திடம் இருந்து வட்ஸ் அப் மூலம் ஒரு தகவலைப் பெற்றார்.

ஏப்ரல் 21 அல்லது அதற்கு முன்னர் எந்த நேரத்திலும் அவர்கள் இலங்கையில் தாக்குதலை நடத்த வாய்ப்புள்ளது என்று அறியப்படுகிறது. தேர்ந்தெடுக் கப்பட்ட எட்டு இடங்களில், ஒரு தேவாலயம் மற்றும் இந்தியர்கள் அதிக எண் ணிக்கையில் தங்கும் விடுதி ஆகியவை அடங்கும். மேலதிக விவரங்கள் எதிர்பார்க் கப்படுகிறது என்று அந்தச் செய்தியில் இருந்தது.

தாக்குதல் நடந்த நாளில், காலை 8.27 மணியளவில் அரச புலனாய்வுச் சேவை மீண்டும் செய்தியைப் பெற்றது.

காலை 6 மணிக்கும் 10 மணிக்கும் இடையில், கொழும்பில் உள்ள மெதடிஸ்த தேவாலயமும் இலக் குகளில் ஒன்று என அதில் கூறப்பட்டிருந்ததாகவும் தெரிவுக்குழு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள் ளது. – (ஐ)

## புளியங்குளத்தில் ரயில் மோதி ஒருவர் மரணம்

*வவுனியா, ஒக். 25*

*யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த ரயிலுடன் மோதுண்டு புளியங்குளத்தில் ஒருவர் உயிரிழந் தார்.*

*நேற்றுக் காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.*

*யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற ரயில் வவுனியா, புளியங்குளம், பரிசன்குளம் ரயில் கடவையில் பய ணித்த போது பரிசங்குளம் இந்திய வீட்டுத்திட்டத்தில் வசித்து வந்த விக்கினன் என்பவரே ரயிலுடன் மோதுண்டு உயிரிழந் தார்.*

*இது தொடர்பான விசாரணைகளை புளியங்குளம் பொலி ஸார் மேற்கொண்டுள்ளனர். (ஐ - 100)*

## இறுதிச்சடங்கில் பங்கேற்க பிரான்ஸ் சென்ற யாழ். இளைஞன் படுகொலை!

பரிஸ், ஒக். 25

பெரியதாயாரின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்வதற்காக டென்மார்க்கிலிருந்து பிரான்ஸுக்குச் சென்ற யாழ்ப் பாணத்தைச் சேர்ந்த இளம் குடும்பஸ் தர் ஒருவர் அடையாளம் தெரியாதவர் களின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரி ழந்தார்.

யாழ்ப்பாணம், உடுவில் பகுதியைச் சேர்ந்த றொனால்ட்டன் (வயது 33) என் பவர் டென்மார்க்கில் வசித்து வருகிறார். அவருடைய பெரிய தாயார் பிரான்ஸின் பாரிஸ் நகரில் வில்நெப் சென்ஜோர்ச் பகுதியில் அண்மையில் காலமாகியி ருந்தார். பெரிய தாயாரின் இறுதிச் சடங்கில் பங்குகொள்வதற்காக றொனால்ட்டனும் குடும்பத்தினரும் பிரான்ஸ் சென்றிருந்தனர்.

இறுதிச்சடங்கில் கலந்து கொண்டி ருந்தவர்கள் இரவு 3 மணியளவில் வெளியில் சென்றிருந்தனர் எனவும், வீட்டுக்குச் சமீபமாக உள்ள பெற்றோல் நிலையப் பகுதியில் நின்றிருந்தவேளை அவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டிருப் பதாகவும் தெரியவருகிறது.



ஒரு வாரம் வைத்தியசாலையில் கோமாநிலையில் அனுமதிக்கப்பட்டிருந்த அவர் கடந்த செவ்வாய் உயிரிழந்துள்ளார்.

அவரது சடலத்தைப் பிரான்ஸ் பொலி ஸார் டென்மார்க் நாட்டுக்கு அனுப்பி வைத்துள்ளனர். மரணத்துக்கான காரணம் பொலிஸாராலும் கண்டு பிடிக்கமுடியவில்லை என்று தெரிவிக் கப்படுகிறது.

உயிரிழந்த குடும்பஸ்தர் இரண்டு வயதுப் பிள்ளையின் தந்தை என்பது டன் அவருடைய துணைவியார் நிறை மாதக் கர்ப்பவதி என்றும் தெரியவருகி றது. (ஐ)

## 2020 முதல் காலாண்டுக்கான வரவு – செலவு நிறைவேற்றம்

கொழும்பு, ஒக். 25

2020ஆம் ஆண்டின் முதல் காலாண்டுக்கான வரவு – செலவுத் திட் டம் நேற்று முன்தினம் நாடாளுமன் றத்தில் நிறைவேற்றப்பட்டது.

வாக்கெடுப்பின்றி இந்த வரவு – செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டது.

அடுத்த ஆண்டு முதல் காலாண்டுக் கான ஒரு லட்சத்து 47 ஆயிரத்து 400 கோடி ரூபாவைப் பெற நாடாளுமன்ற அனுமதியை நிதியமைச்சு கோரியிருந் தது.

வாக்கெடுப்பு இல்லாமல் இந்த வரவு – செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டது.

## வரிச் சீர்திருத்தங்கள் அறிவிப்பு

கொழும்பு, ஒக். 25

நிதி அமைச்சினால் சில வரிச் சீர்தி ருத்தங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய வாகனங்களுக்கான சொகுசு வரி அறவீட்டின்போது, இயந்தி ரக் கொள்ளவிற்குப் பதிலாக வாகன வகைகளின் அடிப்படையில் வரி அற விடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச முற்கொடுப்பனவு மற்றும் பிற்கொடுப்பனவு அட்டைகளை பயன் படுத்தி அந்நிய செலாவணி ஊடாக முன்னெடுக்கப்படும் கொடுக்கல் வாங் கல்களின் போது 3.5 வீத வரி அறவிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வாகனங்களுக்கான கார்பன் வரியை 2018 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் முதல் அமுலாகும் வகையில் இரத்துச்செய்யதீர்மானிக்கப்பட்டுள்ளது.

கையடக்கத் தொலைபேசிகளின் தொலைத்தொடர்பு கோபுரங்களுக்கான வரி முழுமையாக நீக்கப்பட்டுள்ளது.

இரண்டரைக் கோடி ரூபாவுக்குக் குறைந்த தொகையில் குத்தகைக்கு வழங்கப்படும் வீடுகளுக்கான பெறுமதிசேர் வரி முழுமையாக நீக்கப்பட் டுள்ளது.

சிகரெட்களுக்கு வழங்கப்பட்டிருந்த தேச நிர்மாண வரிச்சலுகை நீக்கப் பட்டுள்ளது.

பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான 14 நாள்களுக்குரிய இணை கொடுப் பனவை 20 நாள்களுக்கு வழங்க தீர் மானிக்கப்பட்டுள்ளது.

அலுவலகப் பணியாளர்களின் சீருடைக்கான வருடாந்தக் கொடுப்பனவு 1000 ரூபாவாலும், மூக்குக் கண்ணா டிக்கான கொடுப்பனவு 3000 ரூபா வாலும், பாதணிகளுக்கான கொடுப் பனவு 4000 ரூபாவாலும் அதிகரிக் கப்பட்டுள்ளது. (ஐ)



# பங்களாதேஷ் வீரர்களின் போராட்டம் நிறைவுக்கு!




பங்களாதேஷ் கிரிக்கெட் அணி வீரர்கள், கிரிக்கெட் போட்டிகளில் விளையாட மறுப்பு தெரிவித்து முன்னெடுக்கப்பட்ட வேலை நிறுத்த போராட்டம் நிறைவுக்கு வந்துள்ளது.

பங்களாதேஷ் கிரிக்கெட் வீரர்களின் 11 அம்ச கோரிக்கைகளை, பங்களாதேஷ் கிரிக்கெட் சபை ஏற்றுக்கொண்டதையடுத்து, வீரர்கள் வேலைநிறுத்தத்தை மீளப் பெற்றுக் கொண்டனர்.

பங்களாதேஷ் கிரிக்கெட் சபையிடம் முன்வைத்துள்ள கோரிக்கைகளை நிறைவேற்றும் வரை தாம் எந்தவித கிரிக்கெட் போட்டிகளிலும் விளையாட மாட்டோம் என அணியின் வீரர்கள் கடந்த திங்கட் கிழமை வேலைநிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டத்தின் 11 அம்ச கோரிக்கைகளாக முதல் தர கிரிக்கெட் வீரர்களுக்கு 50 சதவீதம் ஊதிய உயர்வு, அதிகரிக்கப்பட்ட பயணப்படி, பங்களாதேஷ் கிரிக்கெட் லீக்கை வர்த்தக முறையில் மாற்ற வேண்டும், மத்திய ஒப்பந்த ஊதியத்தை அதிகரிக்க வேண்டும், டாக்கா ப்ரீமியர் லீக் போட்டியில் திறந்தவெளி சந்தையில் வீரர்களை மாற்ற வேண்டும் என்பன உள்ளிட்டவை முன்வைக்கப்பட்டது.

இந்த போராட்டத்தில் பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் தலைவர் கிப் அல் ஹசன், மெஹ்முதுல்லா, முஷ்பிகுர் ரஹிம், டமீம் இக்பால், ருபெல் ஹெசைன், மொயிடி ஹசன் உள்ளிட்ட 50 முன்னணி வீரர்கள் ஈடுபட்டனர்.

இதனால் கடும் நெருக்கடிக்குள்ளான பங்களாதேஷ் கிரிக்கெட் சபை, பிரச்சினையை சுமுகமாக நிறைவுக்கு கொண்டுவரும் வகையில், வீரர்களுடன் பேச்சு நடத்த தீர்மானித்தது.

இதற்கமைய நேற்றுமுன்தினம் பங்களாதேஷ் கிரிக்கெட் சபை அதிகாரிகள் மற்றும் வீரர்கள் இடையே சுமார் 2 மணி நேரம் பேச்சு நடந்தது.

இந்த பேச்சில் இருதரப்பும் பங்கேற்பதற்கு சற்று முன்னதாக பங்களாதேஷ் வீரர்கள் தரப்பில் புதிதாக 2 கோரிக்கைகளும் சேர்க்கப்பட்டன.

அவை பங்களாதேஷ் கிரிக்கெட் சபை வருவாயில் குறிப்பிட்ட சதவீத்தை வீரர்களுடனும், அதே அளவிலான தொகையை மகளிர் கிரிக்கெட் வீராங்கனைகளுடனும் பகிர வேண்டும் என்பனவாகும்.

இந்தப் பேச்சில் பங்களாதேஷ் வீரர்கள் தொடக்கத்தில் வைத்த 11 அம்ச கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

இதுகுறித்து, பங்களாதேஷ் கிரிக்கெட் சபைத் தலைவர் நஸ்முல் ஹசன் பாபோன் கூறுகையில்,

'பேச்சு ஆக்கபூர்வமாக நடைபெற்றது. வீரர்கள் முன்வைத்த 11 அம்சக் கோரிக்கைகளைப் பூர்த்தி செய்ய சபை சம்மதம் தெரிவித்துள்ளது. பேச்சுக்கு சில மணி நேரத்துக்கு முன்னதாக சேர்க்கப்பட்ட 2 புதிய கோரிக்கைகள் குறித்து தகவல் தெரியாது' எனக் கூறினார்.

இதைத்தொடர்ந்து பேசிய பங்களாதேஷ் அணித்தலைவர் கிப் அல் ஹசன்,

'பாபோன் கூறியதுபோல் பேச்சு ஆக்கப்பூர்வமாக நடைபெற்றது. எங்களுடைய கோரிக்கைகள் கூடிய விரைவில் பூர்த்தி செய்யப்படும் என்று அவரும், சபையின் மற்ற இயக்குநர்களும் உறுதியளித்துள்ளனர். அவர்களது உத்தரவாதத்தின் அடிப்படையில் நாங்கள் தேசிய கிரிக்கெட் லீக்கில் விளையாடவுள்ளோம். கிரிக்கெட் பயிற்சி முகாமில் பங்கேற்கவுள்ளோம்' என் கூறினார்.

இதனால் பங்களாதேஷ் கிரிக்கெட் அணி, அடுத்த மாத முதல் வாரத்தில் இந்தியாவுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டு ருவென்டி 20 மற்றும் டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது.

இதற்கிடையில் இந்த பிரச்சினை சுமூகமாக தீர்க்கப்பட்டதால், இரு அணிகளுக்கிடையிலான தொடர் எவ்வித பிரச்சினையும் இல்லாமல் நடைபெறவுள்ளது.




## இந்தியாவின் துடுப்பாட்டத்தால் மனதளவில் பலவீனமானோம்

### தென்னாபிரிக்காத் தலைவர் தெரிவுப்பு

இந்திய வீரர்கள் திறமையாக துடுப்பெடுத்தாடி கணிசமான ஓட்டங்களை குவித்ததால் தமது வீரர்கள் மனதளவில் பலவீனம் அடைந்துவிட்டனர் என தென்னாபிரிக்க டெஸ்ட் கிரிக்கெட் அணித்தலைவர் டு பிளசிஸ் தெரிவித்துள்ளார்.

மூன்றாவது டெஸ்ட் போட்டியின் நிறைவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இவ்வாறு தெரிவித்தார்.

உலகக் கிண்ணத் தொடருக்கு பின்னர் தென்னாபிரிக்க டெஸ்ட் அணிக்கு மட்டும் தலைமை தாங்கும் டு பிளசிஸ், வரலாற்றில் மோசமான தோல்வியை எதிர்கொண்டுள்ளார்.

ஏற்கனவே, உலகக் கிண்ணத்திற்கு முன்பதாக இலங்கை அணி தென்னாபிரிக்காவில் வைத்து டெஸ்ட் தொடரில் தென்னாபிரிக்காவை 'வயிட் வோஷ்' செய்தது. தற்போது, இந்தியாவில் 'வயிட் வோஷ்' ஆகியிருக்கிறது.

இந்நிலையில், நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய டு பிளசிஸ், 'கிராம் ஸ்மித் தென்னாபிரிக்காவின் வெற்றிகரமான தலைவராக நீண்ட காலத்திற்கு செயற்பட்டிருந்தார். அதனால் ஒரு நிரந்தர தலைவரை தேட முடியாது போனது. அந்தந்த நேரத்துக்கு ஏற்ப தலைவர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர். அதனால், அடுத்த தலைவர்களை கொஞ்சம் மெதுவாகவே தேட வேண்டி உள்ளது. சரியான நேரம் வரும்போது, சரியானவர் தெரிவு செய்யப்படுவார்' என்றார்.

'இந்த தொடர் உண்மையில் கடினமானது. முன்பு 30, 40 போட்டிகள் விளையாடிய திறமையான வீரர்கள் தான் அணியில் இருந்தார்கள். இப்போது பார்த்தால் ஐந்து, ஆறு, ஏழு, பத்து போட்டிகளில் விளையாடிவர்கள் தான் அணியில் உள்ளார்கள்' எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

தற்போது உள்ள தென்னாபிரிக்க அணியில் டு பிளசிஸ் மட்டுமே அனுபவ வீரராவார். அவர் 61 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ளார். அதுமட்டுமல்லாது இம்முறை இந்தியா சென்ற அணியில் உள்ள 16 வீரர்களில் ஐந்து வீரர்கள் மட்டுமே இதற்கு முன்னர் இந்திய மண்ணில் டெஸ்ட் போட்டியில் விளையாடியுள்ளார்கள்.

'நாங்கள் இந்தியத் துணைக்கண்டத்தில் விளையாடும் போது எங்கள் பந்துவீச்சுப் பாணி வெற்றிகரமாக இருந்ததில்லை. தேவைக்கு ஏற்ப பந்தவீச்சுப் பாணியை மாற்ற வேண்டும். டேல் ஸ்டெய்ன் போன்றவர்கள் அவ்வாறு தங்களை மாற்றக்கூடியவர்கள்' எனவும் டு பிளசிஸ் குறிப்பிட்டுள்ளார்.




# இந்தியாவின் 5 மைதானங்களில் மட்டுமே டெஸ்ட் போட்டிகள் நடத்தப்படவேண்டும்

இந்தியாவில் டெஸ்ட் போட்டிகள் விளையாடுவதாக இருந்தால் குறிப்பிட்ட 5 மைதானங்களில் மட்டுமே போட்டிகள் நடத்தப்பட வேண்டும் என்று இந்தியக் கிரிக்கெட் அணியின் தலைவர் விராட் கோஹ்லி வலியுறுத்தியுள்ளார். ஆனால், அவை எந்தெந்த மைதானங்கள் என அவர் தெரிவிக்கவில்லை.

தென்னாபிரிக்க அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரை 3 – 0 என்ற வகையில் வெற்றி கொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பான கேள்விக்கு பதில் அளித்த விராட் கோஹ்லி, இந்தியாவில் குறிப்பிட்ட மைதானங்களில் மட்டுமே டெஸ்ட் போட்டியை நடத்த வேண்டும் என்பது தொடர்பாக நாங்கள் நீண்ட காலமாகவே விவாதித்து வருகிறோம். டெஸ்ட் கிரிக்கெட் பரபரப்பாகவும், சுவாரஸ்யமாகவும் நீடிக்க வேண்டும் என்று விரும்பினால், நிரந்தரமான டெஸ்ட் மைதானங்கள் தேவை. எல்லா மைதானங்களிலும் டெஸ்ட் போட்டியை நடத்தக்கூடாது. சில இடங்களில் ரசிகர்கள் கூட்டம் வருவதில்லை.

எனவே இந்தியாவில் வலுவான 5 டெஸ்ட் மைதானங்கள் இருக்க வேண்டும் என்பதே எனது கருத்து. இங்கு வரும் வெளிநாட்டு அணிகள் தாங்கள் இந்த 5 மைதானங்களில்தான் டெஸ்ட் போட்டியில் விளையாடப் போகிறோம் என்பதை அறிந்து அதற்கு ஏற்ப தயார்படுத்திக் கொள்ள வசதியாக இருக்கும்.

டெஸ்ட் போட்டியில் விளையாட இந்தியாவில் கால்பதிக்கும் வெளிநாட்டு அணிகளுக்கு தாங்கள் இந்த 5 மைதானங்களில், இத்தகைய ஆடுகளங்களில் தான் ஆடப்போகிறோம், ரசிகர்கள் வருகை இப்படிதான் இருக்கும் என்பவை எல்லாம் தெரிய வேண்டும். அதுவே சவாலான விடயமாக இருக்கும்.

நமது அணி வெளிநாடு சென்று 4 டெஸ்டுகளில் பங்கேற்கப் போகிறோம் என்றால், இந்த மைதானத்தில் தான் விளையாடப்போகிறோம், அங்குள்ள ஆடுகளத்தன்மை எப்படி இருக்கும், ரசிகர்கள் கூட்டம் நிரம்பி வழியப்போகிறது என்பதை எல்லாம் முன்கூட்டியே அறிந்து கொள்கிறோம் – என்றார்.

# தெரிவுக்குழுவின் அறிக்கையை நிராகரிக்கிறது மஹிந்த தரப்பு!

## சஹ்ரானுடன் ஹக்கீமுக்குத் தொடர்பாம்




கொழும்பு, ஒக். 25

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குண்டுதாரி சஹ்ரானுடன் தொடர்புள்ள அமைச்சர் ஹக்கீமும் விசேட தெரிவுக்குழு உறுப்பினராக இருந்துள்ளார். இது தொடர்பான அறிக்கையை எவ்வாறு ஏற்க முடியும் என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து ஆராயும் விசேட நாடாளுமன்றக் குழுவின் அறிக்கை நேற்று முன்தினம் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது. இதன்போது ஒழுங்குப் பிரச்சினையொன்றை முன் வைத்த அவர் மேலும் தெரிவிக்கையில் –

உயிர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டுதாரியான சஹ்ரானை தெரிவுக்குழு உறுப்பினர் ஹக்கீம் சந்தித்துள்ளார். ஆனால் அவர் இந்தத் தாக்குதல் தொடர்பான குழுவில் இருக்கிறார். பக்கச்சார்பற்ற விசாரணைகளுக்குக் குந்தகமாக உள்ளது. இது ரவூப் ஹக்கீம் தொடர்பான பிரச்சினை மட்டுமல்ல முழு நாடாளுமன்றத்தினதும் பிரச்சினையாகும். சந்தேகத்துக்கிடமான நபர்களைத் தெரிவுக்குழு உறுப்பினர் ஹக்கீம் சந்தித்திருப்பது தெரிவுக் குழுவின் பக்கச்சார்பற்ற செயற்பாட்டைப் பாதிக்கிறது. சந்தேகத்திற்கிடமான நபர்களுடனான தொடர்பு பற்றி அவர் சபாநாயகரை அறிவூட்டாது தெரிவுக் குழு அங்கத்தவராக இருந்துள்ளார்.

300 ற்கும் அதிகமானவர்கள் இறந்துள்ளனர். தெரிவுக்குழு நடவடிக்கைகளை ஏற்க முடியாது என கர்தினால் மல்கம் ரஞ்சித் கூறியுள்ளார். சந்தேகத்துக்கிடமான நபர்களுடன் தொடர்புள்ளவர்கள் இருக்கும் அறிக்கையை எவ்வாறு ஏற்க முடியும்? அவ்வாறான உறுப்பினர் நீக்கியிருக்கலாம். புதியவரை நியமித்திருக்கலாம். தொடர்பு குறித்து அமைச்சர் ஹக்கீம் ஏற்றுள்ளார். இந்த நிலையில் இந்த அறிக்கையை எவ்வாறு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க முடியும் – என்றார்.

# பெரமுனவின் தேர்தல் விஞ்ஞாபனம் இன்று!

கொழும்பு, ஒக். 25

பொதுஜன பெரமுனவின் தேர்தல் விஞ்ஞானம் இன்று வெளியிடப்படவுள்ளது.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதி வேட்பாளராகக் கொண்ட பொதுஜன பெரமுன தரப்பு, தனது உத்தியோகபூர்வத் தேர்தல் விஞ்ஞாபனத்தை இன்று வெளியிடும். தாமரைத் தடாக அரங்கில் இது வெளியிடப்படும்.

இதுவரை கோட்டாபயதரப்பினால் மேடையில் பல்வேறு வாக்குறுதிகள் வழங்கப் பட்டு வந்தபோதும், உத்தியோகபூர்வமான அறிவிப்புக்கள் இன்று வெளியாகும்.

கோட்டாபய தரப்பு மேடைகளில் பேசியதாகச் சிறுபான்மை சமூகங்களுக்குள் பரவிய செய்திகளுக்கு விடையாக இந்தத் தேர்தல் விஞ்ஞாபனம் அமையுமென பொதுஜன பெரமுனவின் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

தமிழ்மக்களின் முன்னுரிமைப் பிரச்சினைகள் சிலவற்றுக்கான தீர்வுக்குக் கால எல்லையையும் விஞ்ஞாபனத்தில் வெளியிட வாய்ப்புள்ளதாக அவர் கூறினார்.

அரசியல்கைதிகள் விடுதலை, வடக்கு – கிழக்கு தொழில்துறை அபிவிருத்தி, வடக்கு மீள்கட்டுமானத்துக்கு விசேட அலகு உள்ளிட்ட விவகாரங்கள் விஞ்ஞாபனத்தில் இருக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

# முன்னாள் மீள்குடியேற்ற அமைச்சர் சஜித் பிரேமதாஸ பக்கம் சாய்ந்தார்

கொழும்பு, ஒக். 25

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கரந்தெனிய தொகுதி அமைப்பாளரும், முன்னாள் மீள்குடியேற்ற அமைச்சருமான குணரத்ன வீரக்கோன், புதிய ஜனநாயக முன்னணியின் வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளார்.

காலியில் நடந்த ஐ.தே.கவின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் பங்கேற்று அவர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளிப்பதாகத் தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவளிக்க முடிவு செய்ததை அடுத்து, அந்தக் கட்சியின் அமைப்பாளர்கள், முன்னாள் அமைச்சர்கள், உள்ளூராட்சிச் சபைகளின் பிரதிநிதிகள் பலரும் ஐ.தே.க. வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு தெரிவித்து வருகின்றனர். (ஐ)

# போதைப்பொருள் கடத்துவோருக்கு மரண தண்டனை வழங்க வேண்டும்!

## சஜித் பிரேமதாஸ அதிரடிக் கருத்து

கொழும்பு, ஒக். 25

போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு மரண தண்டனை வழங்க வேண்டும் எனப் புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

புத்தளம் மாவட்டத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

எந்த மதத்தையும் இனத்தையும் வேறுபடுத்தாது பௌத்த சமயத்துக்கு முன்னுரிமையளித்து, முழு நாட்டையும் ஐக்கியப்படுத்தும் புதிய யுகத்தை உருவாக்குவேன்.



சிறிய குழுவினர் பயங்கரவாதச் செயற்பாட்டினை முன்னெடுப்பார்கள் என்பதாலும், மனிதப்படுகொலை செய்வார்கள் என்பதாலும் முழு இனத்தையும் அழிவுப்பாதைக்கு இட்டுச்செல்ல இடமளிக்கமாட்டோம் – என்றார். (ஐ)

# சிறுபான்மை சமூகத்தை கோட்டா புறம்தள்ளார்!

## மஸ்தான் நம்பிக்கை

வவுனியா, ஒக். 25

ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ சிறுபான்மைச் சமூகத்தைப் புறம்தள்ளமாட்டார் என்பதில் தமக்கு மிகுந்த நம்பிக்கையுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபயவிடம் சிறுபான்மைச் சமூகம் சார்ந்து, பல்வேறு கோரிக்கைகளை நாம் முன்வைத்துள்ளோம்.

அதில் முக்கியமாக சிறுபான்மை மக்களின் பாதுகாப்பு, மத சுதந்திரம் உறுதிப்படுத்தப்படவேண்டும் என்பதைச் சுட்டிகாட்டியதுடன், ஏனைய மாகாணங்களைப் போல வடமாகாணத்திலும் அபிவிருத்திகள் இடம் பெறவேண்டும் என்பதனையும் எடுத்துக் கூறியுள்ளோம்.

அவ்வாறான விடயங்களைப் பூர்த்தி செய்து தருவதாக எமக்கு அவர் உறுதிமொழி கூறியுள்ளார். தற்போது சஜித் பிரேமதாஸவை எந்த நிபந்தனைகளும் இன்றி ஆதரிப்பதாகச் சிறுபான்மைக் கட்சிகள் தெரிவித்துள்ளன.

காலி முகத்திடலில் அண்மையில் இடம்பெற்ற ஐக்கிய தேசிய முன்னணியின் கூட்டத்தில் சிறுபான்மைத் தலைவர்கள் பேசுவதற்கு ஒரு வாய்ப்பு கூட வழங்கப்படவில்லை.

இதுதான் தற்போதைய நிலைமை. அவ்வாறிருக்கையில் கோட்டாபயவை ஒரு இனவாதியாக முத்திரை குத்த அனைவரும் முனைந்து வருகின்றனர் – என்றார். (ஐ)

# மரக்கறி உற்பத்தியில் வீழ்ச்சி!

கொழும்பு, ஒக். 25

மழையுடனான வானிலையால் மரக்கறி உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தம்புள்ளை விசேட பொருளாதார மத்திய வர்த்தகர் சங்கத்தின் தலைவர் சாந்த ஏக்கநாயக்க இதனைத் தெரிவித்தார்.

தம்புள்ளை விசேட பொருளாதார மத்திய நிலையத்துக்குக் கொண்டு வரப்படும் மரக்கறிகள் 25 இலட்சம் கிலோ கிராமுக்கும் குறைவடைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.



நாட்டின் பல பகுதிகளில் நிலவும் கடும் மழையுடனான வானிலையினால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் கூறினார். (ஐ)



# பொய்ப் பிரசாரம் குறித்து மக்கள் ஏமாற வேண்டாம்

## கோருகிறார் கோட்டாபய



பொய்பிரசாரங்களுக்கு மக்கள் ஏமாற வேண்டாம் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கம்பளையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கொம்பனி வீதியில் குடிசை வீடுகளில் இருந்த அனைவருக்கும் மாடி வீட்டுத் திட்டத்தை அமைப்பதற்கு முதலீட்டாளர்களைக் கொண்டு வந்தபோது, அது தொடர்பாகப் பொய்யான பிரசாரங்களை மேற்கொண்டு இரண்டு வருடங்கள் எனக்கு நீதிமன்றம் செல்ல வேண்டி ஏற்பட்டது.

எனினும், நான் அந்தத் திட்டத்தை ஆரம்பித்தேன். இந்த அரசு ஆட்சிக்கு வந்த பின்பு, அந்த வீடுகளைப் பகிர்ந்தளித்து அவர்கள் ஒளிப்படம் எடுத்துக்கொள்கின்றனர்.

100 வீதமான முஸ்லிம் மக்களும் மஹிந்தவுக்கு எதிராக அன்று வாக்களித்தனர். எனினும், இன்று என்ன நடந்துள்ளது? அனைத்து வியாபாரங்களும் வீழ்ச்சியடைந்துள்ளன. இந்தப் பொய் பிரசாரங்களுக்கு ஏமாற வேண்டாம் – என்றார்.

# புத்தளம் விபத்தில் மூவர் உயிரிழப்பு

## நால்வர் படுகாயம்

கொழும்பு, ஒக். 25

புத்தளத்தில் இடம்பெற்ற விபத்தில் மூவர் உயிரிழந்துள்ளமையுடன், நால்வர் படுகாயமடைந்துள்ளனர்.

புத்தளம் – அநுராதபுரம் வீதியில் ஆறாவது மைல் கல் அருகில் உள்ள விசேட அதிரடிப்படை முகாமுக்கு அருகில் நேற்று வியாழக்கிழமை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மடு திருத்தலத்துக்குச் சென்று திரும்பிய களுத்துறைப் பகுதியை சேர்ந்தவர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

விபத்து குறித்து வழக்கு பதிவு செய்துள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

# சட்டவிரோத மணல் அகழ்வு கிளிநொச்சியில் அதிகரிப்பு

கிளிநொச்சி, ஒக். 25

கிளிநொச்சி மாவட்டத்தில் சமீப காலமாக சட்டவிரோத மணல் அகழ்வு அதிகரித்துள்ளதாகப் பொது மக்களும் சூழலியலாளர்களும் கவலை தெரிவித்துள்ளனர்.

மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் சட்டவிரோத மணல் அகழ்வு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது எனவும், இது மாவட்டத்தைப் பெரும் பாதிப்புக்கு இட்டுச் செல்லும் எனவும் அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மாவட்டத்தின் பல இடங்களில் மேற்கொள்ளப்படுகின்ற சட்டவிரோத மணல் அகழ்வுக்குச் சட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றவர்களின் ஒத்துழைப்பு இருப்பதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

# தமிழ் இளைஞர்களுக்கு ஐ.தே.க. ஆட்சி ஆபத்து!

## கூறுகின்றார் நாமல் எம்.பி.



கொழும்பு, ஒக். 25

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் தமிழ் இளைஞர்களுக்கு எந்தப் பாதுகாப்பும் இல்லை என எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அத்துடன், வடக்கில் பிரபாகரனின் புகைப்படம் இருந்தது என யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் எந்த ஆட்சிக் காலத்தில் கைது செய்யப்பட்டனர்? எனவும் அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

மட்டக்களப்பு, மட்டு பார் வீதியில் உள்ள மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வடக்கு – கிழக்கில் மக்கள் அன்று பயத்துடன் வாழ்ந்தார்கள். பாடசாலைக்குச் சென்ற சிறுவர்கள் மீண்டும் வீட்டுக்கு வருவார்களா என்ற ஏக்கத்துடன் வாழ்ந்தார்கள். அந்தவேளையில் மஹிந்த ராஜபக்ஷ, ஆட்சிக் காலத்தில் யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. அமைதியைக் கொண்டுவந்த அவர் பொருளாதார ரீதியாகவும் கல்வி ரீதியாகவும் வளர்ச்சியைக் கொண்டு வந்தார்.

இந்த ஆட்சியில் தமிழ் அரசியல் கட்சிகளும் முஸ்லிம் கட்சிகளும் மக்களை ஏமாற்றி வருகின்றன. ஆனால் இந்த அரசியல்வாதிகள் தங்கள் காரியங்களை மட்டும் செய்து வருகின்றனர்.

21ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலுக்குப் பின்னர் அதற்கான மாற்றுவழி எதுவும் செய்யப்படவில்லை. இன்று 6 மாதங்கள் கடந்துவிட்டன. இதற்குப்பொறுப்புக் கூற யாரும் இல்லை.

வடக்கில் பிரபாகரனின் புகைப்படம் இருந்தது என்று கைது செய்யப்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள் எந்த ஆட்சிக் காலத்தில் கைது செய்யப்பட்டனர்?

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சி காலத்தில் தமிழ் இளைஞர்களுக்கு எந்தப் பாதுகாப்பும் இல்லை. இனி எப்போதும் ஐக்கிய தேசியக் கட்சியை நம்பவேண்டாம். கூட்டமைப்பில் உள்ள சுமந்திரன் உள்ளிட்டவர்களும் மக்கள் நன்மை சார்ந்த விடயங்களைப் பெற்றுக் கொள்வதில்லை.

இதனால் விசேடமாக கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் கிழக்கு மாகாணம் பற்றி அதிகம் பேசுவதில்லை. எனவேதான் சிங்கள தமிழ், முஸ்லிம் பிரதேசங்களை அபிவிருத்தி செய்யக்கூடிய ஒரே தலைவர் மஹிந்தவும் எமது ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபயவுமே. எனவே எமக்கு ஆதரவு தந்து பலப்படுத்துங்கள் – என்றார். (ஐ)

# வடக்கு மக்கள் அபிவிருத்தித் திட்டங்களை தீர்மானிக்கும் உரிமைகளை வழங்குவேன்!

## பெண் வேட்பாளர் அஜந்தா பெரேரா கூறுகிறார்




வவுனியா, ஒக். 25

வடக்கு மக்களுக்குத் தேவையான அபிவிருத்தித் திட்டங்களை தீர்மானிக்கும் உரிமையை வழங்குவேன் எனஜனாதிபதிவேட்பாளர் அஜந்தாபெரேரா தெரிவித்தார்.

அத்துடன், வவுனியா ஒரு சிறப்பான நகரம் எனவும் பல வளங்கள் உள்ள நகரமாகக் காணப்படும் வவுனியாவை இலங்கையின் பிரதான நகரமாக மாற்றுவதே தனது நோக்கங்களில் ஒன்று எனவும் அவர் குறிப்பிட்டார். வவுனியாவில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நான் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால் வவுனியா, புத்தளம் பிரதேசங்களைப் பிரதான நகரங்களாகத் தரம் உயர்த்துவேன்.

வடக்கு மக்களுக்குத் தேவையான அபிவிருத்தித் திட்டங்களைதீர்மானிக்கும் உரிமையைவழங்குவதோடு இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்ட மக்களின் காணிகளையும் துரிதமாக மீளளிப்புச் செய்வேன்.

இன, மத பேதங்களை வெளிப்படுத்தும் அடையாளங்களை இல்லாமல் செய்வதோடு இலங்கையர் என்ற அடையாளத்தை உறுதிப்படுத்தல் மற்றும் மத்திய வங்கியின் நுண்கடன் வழங்குவதற்கு பதிவு செய்யப்படாத சட்டவிரோத கம்பனிகளால் பெண்களுக்கு வழங்கப்பட்ட கடன்களை தள்ளுபடி செய்வேன்.

ஜனாதிபதி வேட்பாளர் சிவாஜிலிங்கத்துடன் வடக்கு மாகாணத்தில் மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடியிருந்தேன் – என்றார். (ஐ)

# மாணவர்கள் மீது கண்ணீர்ப்புகை, நீர்த்தாரை பிரயோகம்!

*கொழும்பு, ஒக். 25*

*கொழும்பு கோட்டை தாமரைத் தடாகம் சுற்றுவட்டத்தில் போராட்டத்தில் ஈடுபட்ட பல்கலைக்கழக மாணவர்களைக் கலைக்கப் பொலிஸார் கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொண்டனர்.*

*இதன் காரணமாக கொழும்பு லோட்டஸ் வீதி தற்காலிகமாக மூடப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)*



இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.10.2019 இல் வெளியிடப்பெற்றது.